விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 03 | வள்ளுவர் ஆண்டு 2033 | புரட்டாதி 30 புதன்கிழமை (16.10.2002) | தொலைபேசி~ 2223378 | ஒலி 301

## கொழும்பு ஊடாக வன்னிக்கு வருகை தந்த

# ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

# தலைவர் பிரபாவுடன் நேற்று சந்திப்பு



### சமாதான முயற்சியில் முக்கிய திருப்பம்

(முல்லைத்தீவு)

**தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனை புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகிய இருவரும் வன்னிப் பெருநிலப் பரப்பில் நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.**

**கடந்த மாதம் தாய்லாந்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற முதற் கட்ட நேரடிப் பேச்சு வார்த்தையின் பின் முதற் தடவையாக நேற்றைய சந்திப்பு இடம் பெற்றுள்ளது.**

சிறி லங்கா எயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுக் காலை 9.10மணிக்கு வந்திறங்கிய விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் உடனடியாகவே 9.30 மணிக்கு இலங்கை விமானப் படைகளுக்குச் சொந்தமான விஷேட உலங்கு வானூர்தி மூலம் தமிழர் தாயகப் பிரதேசமான வன்னிப் பெருநிலப் பரப்பில், முதல் பெண் மாவீரரான மாலதியின் நினைவு விளையாட்டுத் திடலில் காலை 10.30 மணிக்கு வந்திறங்கினார்.

**வன்னியில் வரவேற்பு**

விஷேட உலங்கு வானூர்தி மூலம்

(10ம் பக்கம் பார்க்க)





## விமானப் படை அதிகாரி
## பாலாவுடன் ஹெலியில் சென்றார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதியினரை கொழும்பு-கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அரச சமாதான செயலக அதிகாரிகளும், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளும் முகமலர்ச்சியுடன் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

இவர்களின் வருகைக்காக விமான நிலையத்தில் காத்திருந்த அரச தரப்பு அதிகாரிகள், பாலசிங்கம் தம்பதியினரை வரவேற்று அவர்களுக்காகவே விஷேடமாக அமர்த்தப்பட்ட விமானப்படையினின் ஹெலியில் ஏற்றி கையசைத்து

(10ம் பக்கம் பார்க்க)

### பாலாவைப் படம் பிடிக்க அனுமதியில்லை

## கட்டுநாயக்காவில் காத்திருந்த



புதுக்குடியிருப்பிலுள்ள, மாவீரர் மாலதி விளையாட்டுத்திடலில் உலங்கு வானூர்தியில் வந்திறங்கிய ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தம்பதியினருடன் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

# நோர்வே அமைச்சர் ஹெல்கிசன் தலைமையிலான குழு வன்னி வரும்

(முல்லைத்தீவு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிசன், நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்கெய்ம், இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் ஆகியோர் அடுத்தவார முற்பகுதியில் கிளிநொச்சிக்கு வரவுள்ளதாக தமிழீழத்தேசியத்தலைவர் வே. பிரபாகரனைச் சந்தித்து தாய்லாந்தில் இடம்பெறவுள்ள அடுத்தகட்ட பேச்சுக்கள் தொடர்பான ஆலோசனைகளை மேற்கொள்வதற்காக நேற்று வன்னிக்கு வந்த அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கிளிநொச்சிக்கு வருகைதரவுள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார

(10ம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு கூட்டத்தில் நேற்றுக் காரசாரமான விவாதம

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் கூட்டம குழுவின் தலைவர் லூயிஸ் தலைமையில் மாவட்ட அலுவலகத்தில் நேற்று நடை பெற்றது.

இக்கூட்டத்தில் காஞ்சிரங் குடா அதிரடிப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், மற்றும் தாக்குதல் குறித்து கார சாரமான விவாதம் இடம் பெற்றுள் ளது.

காஞ்சிரங்குடா தாக்குதல் குறித்த அறிக்கையை அம்பாறை யுத்த நிறுத்த கண்காணிப் புக்குழுவின் மாவட்ட அலுவலகத் தலைவி, கண்காணிப் புக்குழுவின் தலைமையலுவலகத்திற்கு அனுப்பியிருந்தார்.

இது குறித்தே கூட்டத்தில் விவாதம் இடம் பெற்றது.

இவ்விவாதம் குறித்து அம்பாறை

(10ம் பக்கம் பார்க்க)

# பாலாவுடன் ஹெலியில் சென்றார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தம்பதியினரை கொழும்பு-கட்டுநாயக்கா விமான நிலையத்தில் அரச சமாதான செயலக அதிகாரிகளும், பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளும் முகமலர்ச்சியுடன் கைலாகு கொடுத்து வரவேற்றனர்.

இவர்களின் வருகைக்காக விமான நிலையத்தில் காத்திருந்த அரச தரப்பு அதிகாரிகள், பாலசிங்கம் தம்பதியினரை வரவேற்று அவர்களுக்காகவே விஷேடமாக அமர்த்தப்பட்ட விமானப்படையினரின் ஹெலியில் ஏற்றி கையசைத்து

(10ம் பக்கம் பார்க்க)

## பாலாவைப் படம் பிடிக்க அனுமதியில்லை

# கட்டுநாயக்காவில் காத்திருந்த பத்திரிகையாளர்களுக்கு ஏமாற்றம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் வருகையை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் எதிர்பார்த்துக் காத்திருந்த நூற்றுக்கும் மேற்பட்ட உள்ளூர் வெளியூர் பத்திரிகையாளர்கள் அவரின் வருகையை வீடியோ மற்றும் புகைப் படம் எடுப்பதற்கு முயற்சித்த போதும் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை உச்சப்பாதுகாப்பிற்கு மத்தியில் கட்டுநாயக்காவில் வந்திறங்கிய பாலசிங்கம் தம்பதியினர் அங்கிருந்து விமானப்

(10ம் பக்கம் பார்க்க)

# ஐரோப்பியத் தூதுக்குழு தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கைக்கு உதவிகள் வழங்குவது தொடர்பாக ஆராய் வதற்கு கொழும்புவந்திருந்த ஏழு உறுப்பினர்கள் அடங்கிய ஐரோப்பிய ஒன்றியத்தூதுக் குழுவினர் நேற்று கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழவிடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை சந்தித்து உரையாடியுள்ளனர்.

நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்ற இச்சந்திப்பின் போது இலங்கை அரசுக்கும

(10ம் பக்கம் பார்க்க)

## மேஜர் செந்தூரிக்கு வீரவணக்கம்

(யாழ்ப்பாணம்)

கடந்த திங்கட்கிழமை சுகவீனம் காரணமாக வரச்சாவடைந்த விடுதலைப் புலிகளின் சோதியா படையணியைச் சேர்ந்த மேஜர் செந்தூரி

(10ம் பக்கம் பார்க்க)

## மேலும்ஒருவர் மரணம்

(மட்டக்களப்பு)

அம்பாறை காஞ்சிரங்குடா முகாமைச் சேர்ந்த அதிரடிப்படையினர் கடந்த 9ம் திகதி மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த பொது மகன் ஒருவர் நேற்று

(10ம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

### சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

இல 06 சிவலிங்கப்புளியடி வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த ச.இராமையா என்பவருடைய தேசிய அ.அட்டை இல 640380497 தவறிவிட்டது கண்டெடுத்தவர் மேற்கூறிய முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்

(6008)

## கல்விக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் கல்விக் கண்காட்சி நாளையும், நாளை மறுதினமும் மு.ப. 9.30 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளைத் தலைவர் வி. தியாகராஜாவும்,

சிறப்பு விருந்தினராக தினக்குரல் பொதுமுகாமையாளர் சி நடராஜாவும் கௌரவ விருந்தினர்களான யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி உபபீடாதிபதி பா. தனபாலன் கோப்பாய் நவலர் வித்தியாலய உப அதிபர் திருமதி சாந்தினி வாகீசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இக் கண்காட்சி ஆரம்பக் கல்வி சித்திரம், மனைப் பொருளியல், தமிழ், உளவியல், நடனம், சங்கீதம், இந்துசமயம், தகவல் தொழில் நுட்பம் ஆகிய துறைகளை உள்ளடக்கியது குறிப்பிடத்தக்கது. (உ-10)

## 'நெஞ்சுறுத்தும் கானல்'

### வடமராட்சியில்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மக்களை மிதிவெடிகள், வெடிப்பொருட்களில் இருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு யுனிசெவ் நிறுவனமும் அகிலன் புனர்வாழ்வு நிறுவனமும் மேற்கொண்டுள்ள விழிப்புணர்வுத் திட்டத்தில் ஓங்கமன நெஞ்சுறுத்தும் கானல்' நாடகம் தற்போது வடமராட்சிப் பகுதிப் பாடசாலைகளில் ஆற்றுகை செய்யப்பட்டு வருகிறது.

இந்த வகையில் இன்று மு.ப. 10.30 மணி மற்றும் 1.30 மணிக்கு முறையே பளை மத்திய கல்லூரியிலும், துன்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலும் நெஞ்சுறுத்தும் கானல் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

(உ)

## பாரபட்சமான ஊடகச் செய்திகளுக்கு

# கலைஞர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும்

## சமாதானத்துக்கான கலைஞர்கள் மாநாட்டில் தீர்மானம்

(கொழும்பு)

உள்நாட்டு யுத்தத்திற்கு படை பலத்தால் தீர்வு காண முடியாது. அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடனான நியாயமான அடிப்படையில் அமைந்த ஒரு அரசியல் தீர்வு தேவை.

அண்மையில் கொழும்பு சசக்கராவா மண்டபத்தில் இடம் பெற்றதிருமறைக் கலாமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சமாதானத்திற்கான கலைஞர்களினதும் எழுத்தாளர்களினதும் மாநாட்டில் இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

திருமறைக்கலா மன்ற இயக்குநர் பேராசிரியர் அருட்திரு நீ.மரியசேவியர் அடிகளார் மற்றும் தேசிய சமாதான சபையின் ஊடகப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா ஆகியோர் கலந்து கொண்ட இம் மாநாட்டில் மேலும் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

- வடக்கு, கிழக்கு, தெற்கு மேற்கு அனைத்திலுமுள்ள கலைஞர்களும், எழுத்தாளர்களும் ஒருவரோடொருவர் இணைந்து செயற்படல்
- இளைஞர்களும், இளைஞர்களுக்கான மாற்றுத்திட்ட நிகழ்ச்சிகளினூடாக தங்கள் தங்கள் கலாசாரங்களை அறிந்து கொள்ளும் தேவைப்பாட்டினை வலியுறுத்தல்
- கலைஞர்களாலும் எழுத்தாளர்களாலும் மனித உரிமைகள் துஷ்பிரயோகத்தையும் ஏனைய அநீதிகளையும் பொறுக்க முடியாமை
- உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களில் ஊடகத்துறையின் கவனத்தை ஈர்க்க வைத்தல்
- திரித்தும் பாரபட்சமாகவும் வரும் ஊடக செய்திகளுக்கு கலைஞர்களும் எழுத்தாளர்களும் தங்கள் எதிர்ப்பினைத் தெரிவித்தல்
- எழுத்தாளர்களினதும், கலைஞர்களினதும்சமாதானத்திற்கான ஆக்கங்கள் சிங்களத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்படல்
- எல்லாக்கலைஞர்களுக்கும் மக்கள் முன்னால் சம சந்தர்ப்பம் வழங்கல்
- சிறுவர்களுக்கு சிங்களத்தையும் தமிழையும் பாடசாலைகளில் கட்டாய கல்வியாக்கல்
- சிறுவர்களுக்கு பொதுவானதும்பரஸ்பரமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான வரலாற்று பாடநூல்களைப் படிப்பித்தல்
- முன்னைய அரசியல் திட்டத்தினது இன்றைய அரசியல் திட்டத்தினதும் குறைபாடுகளை சிறுவர்களுக்குப் படிப்பித்தல் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

(உ-7)

## முஸ்லிம்களின் கோரிக்கை ஏற்கப்பட்டால்

# மலையகத் தமிழர்களுக்கும்தனியலகு வழங்குவதே நியாயமானது

## ஆறுமுகன் தொண்டமான் தெரிவிப்பு

(கொழும்பு)

மலையகத் தமிழர்களுக்கும் தனியலகு வேண்டும் என்ற கோரிக்கையை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைக்கும் என அதன்பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர்மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

முஸ்லிம்களின் தனியலகுக் கோரிக்கை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் எமது கோரிக்கை நியாயமானதே.

தாய்லாந்துப் பேச்சுக்களின் இனப்பிரச்சினை தொடர்பான அடிப்படை அம்சங்களில் ஏனைய சமூகங்களுக்கான தீர்வுகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படும் போது மலையக மக்களது எதிர்பார்ப்புக்களுக்கும் அபிலாஷைகளுக்குமான நிலை தொடர்பில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்க்கமானதொரு நடவடிக்கையை மேற்கொளளும்.

முஸ்லிம் சமூகத்தினர் தனியொருநிர்வாக அலகுக்கான கோரிக்கையை முன்வைத்து வருகின்றனர்.

சிறுபான்மை மக்களுக்கு இவ்வாறானதொரு முறை ஏற்படுமானால் சிறுபான்மை இனங்கள்என்ற ரீதியில் மலையக மக்களின் தனித்துவத்தை பிரதிபலிக்கும் வகையில்மலையக மக்கள் செறிந்துவாழும் பகுதியிலும் ஏனையபகுதிகளிலும் எமதுமக்களின் அபிலாஷைகள் அபிவிருத்திகள் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான நடைமுறைகள் தொடர்பில் ஏற்புடைய அமைப்பு முறையை நாம்வலியுறுத்துவோம்.

இந்நிலையில் எமதுகோரிக்கைகளை நிறைவேற்ற பிரதமர் தக்கநடவடிக்கை எடுப்பாரென்ற நம்பிக்கை எமக்குள்ளது என்றும் அவர்தெரிவித்துள்ளார். (உ)

## சேவைக்கால பயிற்சி

(சுதுமலை)

யாழ் மாவட்டத்தில் மலேரியா நோயைக்கட்டுப்படுத்தும்வகையில் யாழ்குடாநாட்டில் உள்ள 7சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 15பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மலேரியாநோயைக் கட்டுப்படுத்துதல்எனும் விடயத்தில் 4நாள் சேவைக்காலப்பயிற்சி பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவு மலேரியாதடை இயக்கப் பிரிவால் நடத்தப்படவுள்ளது.

இச் சேவைக்காலப்பயிற்சி எதிர்வரும்21ம்திகதி திங்கட்கிழமை தொடக்கம் 4தினங்கள் யாழ்போதனா வைத்திய சாலை மருந்துகளஞ்சியப்பிரிவில் நடைபெறவுள்ளது.

இதேவேளை யாழ்மாவட்டத்தில் தற்போது வடமாராட்சி கிழக்குப்பகுதியிலும் தென்மராட்சியின் சிலபகுதிகளிலும் மலேரியா நோயின் தாக்கம் கூடுதலாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-252)

# திக்கம் வடிசாலையை கொத்தணி நிர்வாகத்திடம் ஒப்படைக்க முடிவு

## ஆராய குழு ஒன்றும் நியமிப்பு

(கொழும்பு)

திக்கம்வடிசாலையை பனை அபிவிருத்திச் சபையிடம் இருந்து மீளப்பெற்று கொத்தணி நிர்வாகத்திடம் எதிர்வரும் 25ந்திகதிக்கு முன்னர் ஒப்படைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண பனைதென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் சி.சிவநேசன் தலைமையில் வடமாகாண கொத்தணிக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் கூட்டமொன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பனைஅபிவிருத்திச்சபைத் தலைவர் பொ.சிவபாதம் யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா பனைவள கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் அ.கணேசமூர்த்தி, தமிழீழ நிர்வாகசேவை துணைப் பொறுப்பாளர் பொ.இளஞ்சேரன், மாவட்டநிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன், நிதிப்பிரிவைச் சோந்த செல்வரத்தினம் மற்றும் வி.ஜி.தங்கவேல் ஆகியோர் உட்பட பலர்கலந்து கொண்டனர்.

திக்கம்வடிசாலையை வடமராட்சி கொத்தணிநிர்வாகத்திடம் கையளிப்பது ஆட்சேபனைஇல்லை என்றும் பனை அபிவிருத்திச் சபையின் கீழுள்ள திக்கம் வடிசாலையை கொத்தணி நிர்வாகத்திடம் கையளிப்பதற்கான சட்டவிதிகளை ஆராய்ந்து எதிர்வரும் 25ம்திகதிக்குமுன்னர் அதனைக்கையளிப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் பனை அபிவிருத்திச்சபைத் தலைவர் சிவபாதம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள கி.சிவநேசன், இ.தவராஜா, கா.குணராசா கூட்டுறவுஅபிவிருத்தி ஆணையாளர் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

(த-23)

## புனரமைக்கும்

தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்நாட்டிலுள்ள கோவில்கள் பலவும் கடந்த ஆறுபது ஆண்டுகளாக, நடைபெற்ற மோதல்களால் அழிந்து விட்டன. அவற்றுக்கு மறுவாழ்வு அளிக்கும் மாபெரும் பணி எங்கள் கைகளிலேயே உள்ளது.

எங்கள் ஆலயங்களின் பரிதாப நிலையை உலகெங்கும் வாழும் மக்கள் குறிப்பாக இந்து மக்கள் அறிந்து கொள்வதற்குரிய அவனத்தையும் ஆற்றி வருகின்றேன்.

எமது அமைச்சின் இணையத்தளம் எங்களின் ஆலயங்களின் இன்றைய நிலையையும் ஆலய வரலாற்றையும் அறியப் பெரிதும் உதவும். இலங்கை இணையத்தள ஊடாக இலங்கையின் இந்துக்கோவில்கள் எழுச்சி பெற வேண்டும் என்பது என் விருப்பங்களில் ஒன்றாகும் என்று அவர் தெரிவித்தார்.

(உ)

## வெரித்தாஸ் வானொலி தமிழ்க் குழுவினர்

# இன்று யாழ். வருவர்

(யாழ்ப்பாணம்)

வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பகுதிக் குழுவினர் இன்று மாலை 5.30 மணியளவில் யாழ் ஆயர் இல்லத்திற்கு வருகை தரவுள்ளனர்.

வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப்பிரிவுப் பொறுப்பாளர் அருட்திரு ஏ.சிங்கராயன், சான்தோம் கலைத் தொடர்பு நிலையப் பொறுப்பாளர் அருட்திரு பெனடிக்ற் மற்றும் பியாற்ரோ குயின் ஆகியோர் நேற்று நண்பகல் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

இன்று யாழ்ப்பாணம் வருகை தரும் குழுவினர் யாழ்ப்பாண மறைக் கல்வி நடு நிலையத்தில்நாளை காலை 9மணியளவில் நடைபெறும் உறவுகளின் சங்கமம் நிகழ்வில் கலந்து கொள்வர்.

நாளை மாலையே கிளிநொச்சிக்குச் செல்லும் இக் குழுவினர் 18 ந்திகதி காலை கிளிநொச்சி திரேசம்மா ஆலயத்திலும் 19 ந் திகதி காலை வவுனியாவிலும் வெரித்தாஸ் வானொலி நேயர்களைச் சந்திப்பர். (வ)

## விசேட நாள் பண்ணிசை வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடாத்தும் இலவச தேவாரப் பண்ணிசை வகுப்பின் விஜயதசமி தினத்தையொட்டியவிசேடநாள்வகுப்பு நாளை வியாழக்கிழமை பி.ப 5 மணிக்கு மன்ற தேவாரப் பாடசாலையான கச்சேரி நல்லூர் வீதி ஸ்ரீகாமாட்சி அம்பாள் மடாலயத்தில் மன்ற பண்ணிசை ஆசிரியர் தேவார இசைமணி கே எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-10)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வள்ளுவர் அக்கடமியின் வாணி விழா நிகழ்வுகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு நிறுவன இயக்குநர் செல்வி கேதீஸ்வரி மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது. (இ)

## படையினர் - புலிகள் இடையே

# தொடர்புகளைப் பேணுவதன் மூலம் வீண் பிரச்சினைகளைத் தவிர்க்கலாம்

### ஆலோசனை கூறுகிறார் கண்காணிப்புக்குழுத் தலைவர்

(கொழும்பு)

கிழக்கில் எழுந்துள்ளகொந்தளிப்பு சூழ்நிலையைக் கட்டுப்படுத்துவதில்சகலதரப்பினரும் விருப்புடன் செயற்படுவதைக்காணதான் பெருமகிழ்ச்சியடைவதாககண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் புறூவ்ஹொவ்டே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுக்கள் தொடர வேண்டுமென்றும், அதற்காக சகலதரப்பினரும் உழைக்க வேண்டுமென்றும் எல்லோரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இதனைநிறைவேற்றும்வகையில் படைகளினதும் புலிகளினதும் தொடர்ச்சியானகூட்டங்கள் நடைபெற வேண்டும்.

இந்தவகையில் முதலாவது கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமைநடைபெறும்புலிகளின் தளபதி கருணாவுடனும் பேச்சுக்கள் நடத்தியபோது இது போன்ற கருத்தே தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, அதிரடிப் படைக்கும் புலிகளுக்குமிடையேயும்சந்திப்புக்கள அவசியம். இதுதொடர்பாக பேசுவதற்கு எப்போது சந்திப்பது என்ற கருணாவின் பதிலுக்காக காத்திருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கூறியதாவது சனிக்கிழமை காலை அதிரடிப் படைத் தலைவர் நிமல்குணத்திலகவுக்கும் கருணாவுக்குமிடையேயான சந்திப்புநடைபெறவிருந்தது. பின்னர்ஒத்திவைக்கப்பட்டதுகலவரத்திற்கு காரணம் காஞ்சிரம் குடாஅதிரடிப்படை முகாமே என்றும் அது அகற்றப்படல் வேண்டும் என்றும் விடுதலைப் புலிகள் கோருகின்றனர். மக்கள்மத்தியில் நம்பிக்கையை கட்டி வளர்ப்பதற்கு இது அவசியம் என்றும்கருணாதெரிவித்தார்.

கண்காணிப்புக் குழுவானது முகாம்களை அகற்றுவதில் ஈடுபட்டிருக்கவில்லை. முகாம்களை அகற்றுவதுஅரசியல்தீர்மானமாகும்

ஆனால், அதனைவிட முக்கியமானது, புலிகளுக்கும்அதிரடிப்படையினருக்குமிடையே சந்திப்புகளை வைத்துக் கொள்வதாகும். ஒருமுகாமை அகற்றுவதால் பிரச்சினைகள் தீருவதில்லை. சம்பந்தப்பட்ட தரப்புகளிடையே தொடர்புகளை பேணுவதில் தான் தீர்வு இருககிறது என்றும் புறூவ்ஹொவ்டே தெரிவித்தார். (உ)

## தொலைத் தொடர்பு விஸ்தரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கும-இந்தியாவுக்கும் இடையிலான தொலைபேசித் தொடர்புகள் விஸ்தரிக்கப்படவுள்ளதாசத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை,இந்தியா ஆகிய இருநாடுகளும் தமது கடல் கடந்த தொலை தொடர்புகளை விஸ்தரிப்பதற்கு ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் இந்தியாவின் ஆர்.சி ரெலிக்கொம் நிறுவனம் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. (ம)

## மிருக உறுப்புகள் கடத்தியோர் கைதாகினர்

(கொழும்பு)

திருச்சியில் இருந்து புறப்பட்டு இலங்கைவந்த ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானத்தில் நரித்தலைகள், புலிப்பற்கள் ,புலித்தோல்கள், முள்ளம்பன்றிதோல் மற்றும் மிருகங்களின் உறுப்புக்களைக் கொண்டுவந்த மூவர் கடந்த சனியன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் வசமிருந்த மிருகங்களின் உறுப்புக்களும்கைப்பற்றப்பட்டுள்ளன.

யாகம், சூனியம் என்பவற்றுக்காக பயன்படுத்தவும்,விற்பனை நோக்கிலும் இவை கொண்டுவரப்பட்டதாக கைது செய்யப்பட்டவர்கள் சுங்க அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளனர். (உ)

## அடுத்த சுற்று பேச்சு குறித்து ஆராய

# பிரதமர் ரணில் விரைவில் நோர்வே செல்வார்

(கொழும்பு)

தாய்லாந்தில் 31ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை தொடர்பாகக் கலந்துரையாடுவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அடுத்த வாரம் நோர்வேக்குப் பயணமாகவுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நோர்வேக்குப் பயணமாவதற்கு முன்னேற்பாடாக கொழும்பில் உள்ளநோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கை நேற்று மாலை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

தாய்லாந்தில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையை மையமாக வைத்து நடத்திய இப்பேச்சுவார்த்தையின் அடிப்படையில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசனை நோர்வேயில் வைத்து பிரதமர் சந்திக்கவுள்ளார். (ம)

## நிர்வாகிகள் தெரிவு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர் நலன்புரிச் சங்க நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றபோது தலைவராக செ. கென்றிலிஸ்மன், உப தலைவராககே.கோபாலசிங்கம்செயலாளராகச.கேதீஸ்வரன், பொருளாளராக இ. குணநாயகம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-75)

## படுகொலைச் சம்பவங்களை

# புதிய ஜனநாயகக் கட்சி கண்டித்து அறிக்கை

(யாழ்ப்பாணம்)

திருக்கோவிலிலும் திருகோணமலையிலும் நடாத்தப்பட்ட ஆயுதப்படைகளின்கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூடு, கிரனைட் வீச்சுச் சம்பவங்கள் எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாதவைகளாகும்.

பத்துப் பேரது உயிர்களைப் பலிகொண்டு ஐம்பதுக்கு மேற்பட்டோரைக் காயப்படுத்தியுள்ள மேற்படி தாக்குதல்களின் அடிப்படைபேரினவாத ஆதிக்கவெறித்தனமேயாகும்.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழுசார்பாக அதன் பொதுச் செயலாளர்இ. கா. செந்திவேல்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில், தற்போது கடைப்பிடிக்கப்பட்டுவரும் யுத்த நிறுத்தத்தையும் அதன் மூலமான சமாதான சூழலையும் குழப்பிக் கொள்ள சமாதான விரோத சக்திகள் தருணம் பார்த்து காத்திருந்து வருகின்றன.

பேரினவாத யுத்தவிரும்பிகளும் யுத்தத்தின் மூலம்அரசியல் பொருளாதார லாப மீட்டியவர்களும் சமாதானம்நீடிப்பதை விரும்பவில்லை. சில வெளிநாட்டு சக்திகளும் தத்தமது மறைகரங்கள் மூலம் சமாதானத்திற்கும் பேச்சுவார்த்தைக்கும் குழி பறிக்க செயலாற்றி வருகின்றன.

எனவே அரசாங்கமும் புலிகள் இயக்கமும் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை விரைவு படுத்தி உறுதியான முடிவுகளுக்குவருவதன்மூலமே குழப்பவாத சக்திகளைத் தோற்கடிக்க முடியும் என்றுள்ளது. (உ)

## தென்னங்கன்றுகள் எடுத்துவருகை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் மீள்நடுகை செய்வதற்கென 2 ஆயிரத்து 500 தென்னங்கன்றுகள் குருநாகலில் இருந்து கொண்டு வரப்பட்டுள்ளன

மீசாலை புத்தூர் சந்தியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ள இக் கன்றுகள் இன்றில் இருந்து இப்பகுதி குடியிருப்பாளர்களிற்கு வழங்கப்படவுள்ளன. (உ-10)

# சாரதி அனுமதிப் பத்திர எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப் பத்திரம் வழங்குவதன் நிமித்தம், கடிதம் மற்றும் நேரடியாக வழங்கப்பட்ட பரீட்சை அனுமதி அட்டைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு குறித்த திகதிகளில் விண்ணப்பதாரிகளுக்கு எழுத்துப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இதேவேளை கடந்த 12 ஆம் திகதி நடத்தப்படாத எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் இம்மாதம் 12 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை நடைபெறவிருந்த வாகனம் ஓட்டும் செயல் முறைப் பரீட்சை குறித்த திகதிகளில் நடைபெற மாட்டாது எனவும் இவர்களுக்கான செய்முறைப் பரீட்சைத் திகதிகள் பற்றிய விபரங்களும்,

13 ஆம் திகதி நடைபெற்ற எழுத்துப் பரீட்சை பெறுபேறுகளும் அவர்களுக்கான செயன்முறைப் பரீட்சை விபரங்களும் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ் மாவட்ட மோட்டார் போக்கு வரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதன் அறிவித்துள்ளார். (உ-10)

## பொ. ஐ. மு. ஆட்சிக் காலத்தில்

# திறமை இல்லாதவர்களே அமைச்சரவையில் அங்கம் பெற்றனர்

## கொம்யூனிஸ்ட்கட்சி பொதுச் செயலர்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தில் இருந்தஅமைச்சர்களில்பெரும்பாலானவர்கள் திறமை இல்லாதவர்கள் என்று இலங்கை கொம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச்செயலாளர் ஜி. எம். குணசேகர தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற கூட்ட மொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்; இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர் திறமையில்லாத அமைச்சர்களைக் கொண்ட அமைச்சரவை இதுவாகவே இருந்தது.

இலங்கையின் பொருளாதாரத்தை, சர்வதேச பொருளாதார பிரச்சினைகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பதுபற்றி கண்டறிய அமைச்சரவையில் இருந்த ஒருவருக்கு கூட போதிய ஆற்றல் இருக்கவில்லை;

வரட்சி, நீர்விநியோகத் தடை, ஊழல் என்பன பொருளாதாரத்தின் மீது எந்தளவிற்கு எதிர்மறையான தாக்கத்தை கொண்டிருந்தன என்பதுபற்றி மத்தியவங்கி அறிக்கை தெளிவாக காட்டுகிறது.

ஆனாலும் அன்று அமைச்சரவையில்இருந்த ஒருவர்கூட இந்த பிரச்சினைகள் குறித்து விவாதிக்ககூடிய நிலையில் இருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (உ-8)

## மிருசுவில் படுகொலை

# ட்ரயல்அட்பார் நீதிமன்றில் விசாரிக்க உத்தரவு

(யாழ்ப்பாணம்)

மிருசுவில பகுதியில் கடந்த 2000ஆம் ஆண்டு வீடுபார்க்க சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7பேர் இராணுவத்தினரால் கொல்லப்பட்டமை குறித்து ட்ரயல் அட்பார் விசாரணை நடத்தும் படி பிரதம நீதிபதி சரத் என்சில்வா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

மேலதிக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் வழக்குகள் ஒரு நீதிபதி மற்றும் ஜூரர்களின் முன்னாலே விசாரணை செய்யப்படுவது வழக்கம் ஆயினும், விசேடமான சம்பவங்கள் சம்பந்தமான வழக்குகள் ட்ரயல் அட்பார் விசாரணைக்கு உட்படுத்துவதற்கு அமைவாக மிருசுவில் கொலை வழக்கும் அமைகிறது.

பிரதம நீதியரசரின் உத்தரவிற்கு அமையஎஸலன் நிமால் சரத் அம்பே சிங்கிய குமார் எகநாயக்க ஆகிய 3 நீதியரசர்களின் முன்நிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவுள்ளது.

மேற்படி படுகொலைசம்பவத்தில் ஒரே குடும்பத்தவரான 7 பேர் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டு குழி தோண்டிப்புதைக்கப்பட்டதும், சந்தேகத்தின் பேரில் 8 இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளமையும்குறிப்பிடத்தக்கது. (உ-10)

## அடிப்படை வசதிக் குறைவால்

# பரீட்சை முடிவுகளில் பாரிய தாக்கம்

(தென்மராட்சி)

இவ்வாண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மொத்த மாணவர்களுள் 50 சதவீதமான மாணவர்களே சித்தியடைந்துள்ளனர்.

குடாநாட்டிலுள்ள பாடசாலைகளில் உரிய கட்டட வசதிகள் இன்மை, அடிப்படை வசதிகள் இன்மை, தளபாடமின்மை,தகுதியான ஆசிரியர்கள்இன்மைமற்றும் கற்பித்தல் உபகரணங்கள் இன்மை போன்ற காரணங்களாலேயே இந்த நிலை ஏற்பட்டது என யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சுட்டிக்காட்டியுள்ளது. (உ-77)

# சிறிய நுண்பாக கைத்தொழில் சம்மேளனம் யாழில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சிறுகைத்தொழில் சம்மேளனத்தின் இணை சங்கமான சிறிய நுண்பாக கைத்தொழில் சம்மேளனம் நேற்று முன்தினம் யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கேட்போர் கூடத்தில் சம்மேளனத் தலைவர் ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிறு கைத்தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளைஉரிய இடங்களுக்கு தெரியப்படுத்தி அதற்குரிய தீர்வுகளை பெற்றுக் கொள்வதே இச் சம்மேளனத்தின் நோக்கமாகும்.

இச் சம்மேளனத்தின் தலைவராக கட்டட ஒப்பந்தக்காரர்ரி. பாலசுந்தரமும் செயலாளராக மில்க்வைற் நிறுவனத்தைச் சேர்ந்த ஆ. தவகோபாலும் பொருளாளராக என். தர்மசீலனும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-10)

# சர்வதேச ஆயுதப் பரிசோதகர்களை ஈராக்கிற்குள் அனுமதிப்பது தொடர்பான பேச்சு ஆரம்பம்

## ஐ.நா பிரதிநிதிகளும் - ஈராக் உயரதிகளும் சந்திப்பு

(பக்தாத்)

ஈராக் சர்வதேச ஆயுதப்பரிசோதகர்களை அனுமதிக்கும் விவகாரம் குறித்து ஐக்கிய நாடுகள்சபையின் பிரதிநிதிகளும் ஈராக்கின்உயர் அதிகாரிகளும் சந்தித்துப் பேச்சு வார்த்தை ஆரம்பித்துள்ளார்கள்.

சர்வதேச ஆயுதப்பரிசோதகர்களை நாட்டிற்குள் அனுமதிப்பதற்கு ஈராக் இணக்கம் தெரிவித்துள்ளதையடுத்தே இருதரப்பினர்களிற்குமிடையே பேச்சு வார்த்தை நடை பெறுகின்றது.

ஒரு மாத காலம் நடை பெறவுள்ள இப்பேச்சு வார்த்தையில் ஈராக் ஆயுதங்களை மறைத்து வைத்திருக்கலாமென சந்தேகிக்கப்படும் இடங்களை சர்வதேச ஆயுதப் பரிசோதகாகள் சோதனைகள் மேற்கொள்வது குறித்து விரிவாக ஆராயப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனின வாசஸ்தலத்தை சோதிப்பது குறித்தும் விரிவாக ஆராயப்படுமென தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே ஈராக்கில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் கூட்டாக இணைந்து மேற்கொண்ட வான் தாக்குதலை ரஷ்யா வன்மையாக கண்டிக்கின்றது.

இத்தகைய தாக்குதல் ஈராக் சர்வதேச ஆயுதப்பரிசோதகர்களை அனுமதிக்கும் விவகாரங்களைப் பாதிக்குமென ரஷ்யா அதிருப்தி தெரிவித்துள்ளது.

இதேவேளை ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் அமெரிக்கா முன்வைக்கவுள்ள தீமானத்திற்கு சீனா, ரஷ்யா பிரான்ஸ் ஆகிய நாடுகளிடமிருந்து ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்காக அமெரிக்காவும் பிரித்தானியாவும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (சு-2)



ஸ்பெயின் நாட்டின் மௌட்ஸேராட் நகரில் உள்ள சௌப்ரியர் மலையில் இருந்து நெருப்புக் குழம்பு வெளிவருவதைக் காணலாம். பாதுகாப்புக் கருதி அங்கு வாழ்ந்து வந்த மக்கள் தங்களது இருப்பிடங்களை விட்டு வேறு இடங்களுக்குக் குடிபெயர்ந்துள்ளனர்.

# பாலித்தீவில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலுக்கு ஐ.நாவின் பாதுகாப்புப் பேரவை கண்டனம்

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவின் உல்லாசத் துறை தீவான பாலியில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களை ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப்பேரவை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இதனையடுத்து அங்கத்துவ நாடுகளை கொண்ட பாதுகாப்புப் பேரவை நேற்று விஷேட கூட்டமொன்றை நடத்தி கண்டனத் தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

அத்துடன் இத்தாக்குதல்களை மேற் கொண்டவர்களை கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்த அனைத்து நாடுகளும் உதவவேண்டும் என்ற தீர்மானமொன்றும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத் தீர்மானத்திற்கான பிரேரணையை பிரிட்டன் முன்வைத்தது.

ஐக்கிய நாடுகளிற்கான பிரிட்டன் தூதுவராக கடமையாற்றும் சேர்க் ஜெரமி குயின்ஸ்ரா பயங்கரவாதத்திற்கெதிரான பாதுகாப்புக் குழுவிற்கு தலைமை வகிப்பது குறிப்பிடத்தக்கது. (சு-2)

உலக தரிசனம்



ஈரான் தலைநகர் தெஹ்ரானில், காவல்துறை பயிற்சி முடித்த பெண்களின் அணிவகுப்பு நிகழ்ச்சி நடை பெற்றது. நிகழ்ச்சியில் கையில் துப்பாக்கியுடன் அணி வகுத்து நிற்கும் பெண்கள்.

# சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபரை சுவீடன் பொலிஸார் விடுவிப்பு

(ஸ்டாக்ஹோம்)

சுவீடனில் இருந்து பிரித்தானியாவிற்குச் செல்லவிருந்த விமானமொன்றை கடத்தத் திட்டமிட்டுள்ளாரென குற்றஞ் சாட்டப்பட்டுக் கைது செய்த நபரை சுவீடன் பொலிஸார் நிபந்தனையின் கீழ் விடுதலை செய்துள்ளனர்.

சுவீடனிலிருந்து பிரித்தானியாவிற்கு செல்லவிருந்த விமானத்தில் 50வ்யதான சலீம்சரத்ஸகீம் கைப்பையினுள் கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததையடுத்து, சுவீடன் பொலிஸார் இவரைக் கைது செய்து விசாரனைகளை மேற்கொண்டபோது, இவர் மீது சுமத்தப் பட்டுள்ள குற்றச்சாட்டு தெளிவில்லாமல் உள்ள தெனவும் வேறு ஆதாரங்கள் எதுவும் கிடைக்காத நிலையில் நிபந்தனையின் கீழ் இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். சலீம்சரத்ஸகீம் வெளிநாடுகளிற்கு செல்வதற்கு தற்காலிகமாக தடைவிதித்திருப்பதோடு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று ஒழுங்காக கையொப்பமிட வேண்டுமெனவும் பொலிஸாரால் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. (சு-2)

# சோவியத்தில் நடை பெற்ற இரண்டாம் கட்டத் தேர்தல் ரத்து

(மொஸ்கோ)

சோவியத்தில் நடைபெற்ற ஜனாதிபதி பதவிக்கான இரண்டாம் கட்டத் தேர்தல் அனுமதிக்க முடியாதது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இத்தேர்தலில் 46%மக்களே வாக்களித்திருந்தனர்.

சோவியத் அரசியல் சட்டப்படி வாக்களிப்பு வீதம் 50இற்கும் குறைவாக இருந்தால் அத்தேர்தல் செல்லுபடியற்றதாகும் எனக் கருதப்படும். கடந்த தேர்தல் வாக்குகளின் எண்ணிக்கையில் தேசியவாதியாக சித்தரிக்கப்படும் வழக்கறிஞர் பொஸ்லாம் பொஸ்னிகா முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (சு-2)

ஜமேக்காவில் நடை பெறவுள்ள

# தேர்தல் கண்காணிப்பு குழுவின் தலைவராக ஜிம்மி கார்ட்டர்



கரிபியன் தீவுகளில் ஒன்றான ஜமேச் காதீவின் தேர்தலைக் கண்காணிக்க முன்னாள் அமெரிக்க ஜனாதிபதியும் சமாதானத்திற்கான இவ்வருட நோபல் பரிசைவென்றவருமான ஜிம்மி கார்ட்டர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று நடை பெறவுள்ள இத்தேர்தலினைக் கண்காணிக்கத் தெரிவாகியுள்ள 60நாடுகளின் தலைவர்களை உள்ளடக்கியுள்ள இக் குழுவிற்கு ஜிம்மி கார்ட்டர் தலைமை தாங்குவார். அண்மைக்கால தேர்தல் பிரசாரங்களில் வன்முறைகள்

இடம் பெற்றாலும் நேர்மையான தேர்தலை ஜமேக்கா நடத்தும் என்று ஜிம்மி கார்ட்டர் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (சு-2)

# பெரம்பலூர் வெடி விபத்தில் 15 சிறுவர்கள் காயம்

(புதுடில்லி)

பெரம்பலூர் மாவட்ட துங்காபுரம கிராமத்தில் கோவில் திருவிழாவில் வெடிக்காத வெடிகளைச் சேகரித்து அவற்றைப் பற்ற வைக்கும் முயற்சியில் ஈடுபட்ட சிறுவர் சிறுமிகள் 15 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு மீனாட்சியம்மன் சொக்கநாதன் கோயில் கும்பாபிஷேக நிகழ்ச்சிக்காக, வான வேடிக்கை நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அப்போது வெடிக்காமல் சிதறிக் கிடந்த வெடிகளை வெடிக்கச் செய்வதில் இவர்கள் ஈடுபட்ட போது இவ் அனர்த்தம் நிகழ்ந்தது.

காயமடைந்தவர்களில் 4பேர் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் தஞ்சாவூர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட் டனர். எனினும் உயிருக்கு ஆபத்து ஏதும் இல்லை என்று மருத்துவ மனை வட்டாரங்கள் தெரிவித்தன. (சு)

# மத்திய அமைச்சரவையிலிருந்து உமர் அப்துல்லா ராஜினாமா

(காஷ்மீர்)

ஜம்மு காஷ்மீர் மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் தேசிய மாநாட்டுக் கட்சி தோல்வியதைத் தொடர்ந்து மத்திய வெளியுறவுத் துறை இணை அமைச்சராக பதவி வகித்த அக்கட்சியின் தலைவர் உமர் அப்துல்லா நேற்று பிரதமர் வாஜ்பாயை சந்தித்து தனது ராஜினாமா கடிதத்தை கொடுத்துள்ளார்.

இதன் மூலம் தேசிய மாநாட்டுக் கட்சியை ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் மேலும் வலுப்பெறச்செய்வதற்கு தனது நேரத்தை செலவிட ஏதுவாகும் என்று பிரதமரைச் சந்தித்து ராஜினாமா கடிதத்தை அளித்தபின் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் குறிப்பிட்டார்.

உமர் அப்துல்லா வகித்த மத்திய அமைச்சர் பதவியை தேசிய மாநாட்டுக் கட்சியைச் சேர்ந்த வேறு ஒரு எம்.பி.வகிப்பாரா என்று செய்தியாளர்கள் கேட்ட போது, இது பற்றி கட்சியின் செயற்குழு முடிவு செய்யும் என்று பதிலளித்தார்.

ஜம்மு - காஷ்மீர் மாநிலத்தில் ஆட்சியில் இருந்த தேசிய மாநாட்டுக் கட்சி, நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் மொத்தமுள்ள 87 தொகுதிகளில் 28இடங்களை மட்டுமே கைப்பற்றியது. கட்சியின் தலைவரான உமர் அப்துல்லா, மக்கள் ஜனநாயக கட்சி வேட்பாளரிடம் தோற்றுவிட்டார் என்பர் குறிப்பிடத்தக்கது. (சு-2)

# ஆசிய விளையாட்டுப் போட்டியில் வீராங்கனை ஊக்கமருந்து பாவித்தது ஊர்ஜிதமாகியுள்ளது

## வென்ற பதக்கங்கள் பறிபோகும் அபாயம்




14வது ஆசிய விளையாட்டு போட்டியில் இந்தியத் தடகள வீராங்கனை சுனித்தா ராணி, ஊக்க மருந்து பயன்படுத்தியது ஊர்ஜிதப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் இவ் வீராங்கனை பெற்ற 2 பதக்கங்களும் பறி போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

1500 மீற்றர் ஓட்டபந்தயத்தில் தங்கப்பதக்கத்தினையும் 5000 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றார். 1500 மீற்றர் ஓட்டப்பந்தயம் முடிவடைந்ததும் ஆசிய விளையாட்டு மன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்து பயன்படுத்தியது தெரியு வந்துள்ளது.

இதனை தொடர்ந்தும், 5000, மீற்றர் ஓட்டப் பந்தயத்தின் பின்னர், மேற்கொண்ட பரிசோதனையிலும் ஊக்கமருந்து பயன்படுத்தியது உறுதி செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25ம் திகதி நடைபெறவுள்ள ஒலிம்பிக் பரிசோதனைக குழுவினரால் மேற்கொள்ளப்படும் இறுதிப் பரிசோதனையின் பின்னர் அவரது பதக்கங்கள் பறிக்கப் படுவது பற்றித் தெரியவரும். (சு)



பிரான்ஸ் மற்றும் ஜேர்மனியின் சாலை போக்குவரத்தை இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள 'புல் பியரி' மேம்பாலம் போக்குவரத்திற்காக திறந்துவிடப்பட்டது. ரினி நதியின் மீது கட்டப்பட்டுள்ள இந்த மேம்பாலம் பிரான்ஸ் நாட்டின் இஷ்ச்ய மற்றும் ஜேர்மனியின் அல்டெனஹிம் நகரங்களை இணைக்கிறது.

# இன்று ஒரு தகவல்

## மனமும் நிறைவும்

ஓர் ஊரில் ஓர் ஆள் இருநதான்.அவன் நிறையப் பணம்சம்பாதித்தான்.ஆனால் செலவு செய்ய மனம் வரவில்லை. சேர்க்க விரும்பிய அவனுக்குச் செலவழிப்பதில் விருப்பமில்லை, மகாகருமி. பணம் சேர்ந்து கொண்டே இருந்தது.அவன் என்ன பண்ணினான் தெரியுமா? வீட்டில் இருந்த பணத்தையெல்லாம் எடுத்துக் கொண்டுபோய் ஒரு மரத்தடியில் புதைத்து வைத்தான்.வீட்டில் வைத்திருப்பதை விடப் புதைத்து வைப்பது பாதுகாப்பானது என்று அவன் நினைத்தான், அப்படியே செய்தான். வாரத்துக்கு ஒருதடவை அவன் அந்த மரத்தடிக்கு வருவான். புதைத்து வைத்திருக்கிற இடத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பான்...அப்புறம் போய்விடுவான், அவ்வளவுதான்.

தற்செயலாக ஒரு திருடன் இதைக்கவனித்தான் அவனுக்குச் சந்தேகம், இவன் ஏன் இப்படி வாரம் தவறாமல் வருகிறான்? எதற்காக அந்தக் குறிப்பிட்ட இடத்தையே பார்த்துக் கொண்டிருக்கிறான்?திருடனுக்கு சந்தேகம் வலுத்தது,ஒருநாள நள்ளிரவு நேரம்,திருடன் அந்த இடத்துக்கு வந்தான். தோண்டிப் பாாத்தான்,புதையல் கிடைத்தது,அவ்வளவையும் எடுத்துக் கொண்டு போய்விட்டான்.

அடுத்த வாரம் புதைத்து வைத்தவன்வந்து பார்த்தான். புதையலைக் காணவில்லை. புலம்ப ஆரம்பித்து விட்டான்.இவன் அழுகிற சத்தம் கேட்டு அககம்பக்கத்தில் உள்ளவர்கள் எல்லாம் ஓடி வந்தார்கள். 'என்ன விஷயம்?—என்று விசாரித்தார்கள். புதைத்து வைத்தேன்,போய்விட்டது. என்று புலம்பினான், அங்கேயிருந்த ஒருபெரியவர் அவனை நெருங்கினார். 'ஏனப்பா...எவ்வளவு புதைத்து வைத்திருந்தாய்?' என்றார். 'ஏராளமாக வைத்திருந்தேன்.எல்லாம் போய் விட்டது, என்றார். எப்போதாவது இங்கே வந்து பார்ப்பது உண்டா?' 'வாரம் தவறாது வருவேன்... பக்கத்தில் உட்கார்ந்து கொஞ்சநேரம் பார்த்துக் கொண்டிருப்பேன். பின் போய்விடுவேன்.

''எப்போதாவது இதில் இருக்கிற பணத்தை எடுத்துச் செலவு பண்ணியிருக்

தச் செல்வத்தை அனுபவிக்கிற திறன், பயன் படுத்துகிற திறன் - என்பவற்றை வைத்துத் தான் அவர் ஏழையா பணக்காரராஎன்பதை நிர்ணயம் செய்ய வேண்டும். அது தான் சரி! செலவு பண்ணத் தெரியாதவன் சேகரம் பண்ணிக் கொண்டே இருப்பதால் என்ன பயன்? தலை முடியே இல்லாதவன் தாராளமாகச் சீப்புகளை வாங்கிச் சேகரம் பண்ணுவது மாதிரித்தானே இது.

சில சமயம் செலவு செய்ய நாம் தயாராக இருந்தாலும் கூட அந்தச் செல்வம் நமக்குப் பயன் படுவதில்லை. அரேபியாவில் ஒரு நகை வியாபாரி. விலை உயர்ந்த முத்துக்களையெல்லாம்வைத்து அவர்வியாபாரம் பண்ணிக் கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் பாலைவனம் வழியாக ஒட்டகத்தில் சென்று கொண்டிருந்தார். அப்போது கடுமையான புயல் திடீரென்று வீச ஆரம்பித்து விட்டது. ஒட்டகம் தடுமாறியது. இவர் திசைமாறினார். திசை தவறி எங்கேயோ ஓர் இடத்துக்கு வந்து விட்டார். உடன் வந்தவர்களையும் காணவில்லை. எங்கே போனார்களோ தெரியவில்லை.இவர் மிகவும் பயந்து போனார்.

அங்கும்இங்குமாக அலைந்து திரிந்தார். வழியே தெரியவில்லை. பசி வயிற்றைக் கிள்ளியது. அப்போது ஒட்டகத்தின் முதுகிலேஇருந்த ஒரு மூட்டை கண்ணில் பட்டது. அதைக்கீழே இறக்கினார். ஆவலோடு பிரித்துப் பார்த்தார். உண்பதற்கு உள்ளே ஏதாவது இருக்குமா என்று தேடினார். அதுவரையும் கண்ணில் படாதஅபூர்வமானபை ஒன்று கண்ணில் பட்டது. 'ஆமா,அதில் ஏதாவது... இருக்கும் சாப்பிடுவதற்கு' என்று நினைத்து அவசரமாக அதைப் பிரித்தார். அந்தப் பையில் இருந்தவை விலையுயர்ந்த முத்துக்கள். இந்த நிலையில் தான் அவருக்கு ஓர் உண்மை புரிந்தது

'விலை உயர்ந்த முத்துக்கள் கூட சாப்பிடுவதற்குஉணவாக முடியாது என்பதைப் புரிந்துகொண்டார்எந்த நேரத்தில்எதுநமக்குத்தேவையோ அது நமக்குத் தாராளமாகக் கிடைக்க வேண்டும். அப்படி அது கிடைப்பதற்கு நம்மிடம் இருக்கிற செல்வம் யயன்பட வேண்டும். அது நமக்கும் பயன்படலாம்; நம் ...

# எந்தக்காரணத்தை முன்னிட்டும் பதவி விலகப் போவதில்லை

## ஜனாதிபதி சந்திரிகா சூளுரை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் 19வது அரசியல் திருத்தம் தனக்கு எதிராக கொண்டு வரப்பட்டநம்பிக்கையில்லாப் பிரேரணை என ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்காகுமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற மாநாடொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்:எனக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முழு அளவில் சமர்ப்பிக்க முடியாத நிலையில்,அதன் ஒருபகுதியாகவே இந்தத்திருத்தம் கொண்டு வரப்படுகிறது.

எதுஎவ்வாறாகஇருந்தாலும் எக்காரணம் கொண்டும் நான் பதவி விலகப் போவதில்லை,

எனக்கு எதிராக ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது,அதற்குபதில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை தவிர வேறுவழி எனக்குத் தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

பொதுஜனஐக்கிய முன்னணியை சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சித்தாவல் செய்யவுள்ளனர்.

தனது உரைகள்சிலவற்றை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம தணிக்கை செய்துள்ளது.

தற்போதுரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவியில் உள்ள பேராசிரியர் தம்மிக்க கங்காநாதிஸ்ஸ நாயக்க, தினகரன் பத்திரிகை நிருபராக விருந்த போது செய்திகளை எவ்வாறு எழுதுவது என்பது பற்றி நானே அவருக்குபோதித்தேன் என்று குறிப்பிட்டார்.

எனது பேச்சுக்களை ரூபவாஹினி படப்பிடிப்பு நிபுணர் படம் பிடிக்கும் போது, எனது உருவத்தை திருப்பிக் காண்பிக்குமாறு திஸ்ஸ நாயக்க உத்தரவிட்டிருந்தார் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

இந் நாட்டின் ஜனாதிபதிக்குக் கூட ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

(உ-8)

## பேருந்து செல்ல மட்டுமே அனுமதி

(ஊர்காவற்றுறை)

நயினாதீவின் பிரதானவீதியூடாக வடபிராந்தியபோக்குவரத்துச் சபையின் பேருந்து மட்டுமே செல்ல அனுமதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

மேற்படி பிரதான வீதியூடாக சைக்கிளிலோ,அல்லது நடந்தோ எவரும் பிரயாணம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை எனவும கூறப்படுகிறது. (உ-75)

## இராசி பலன்

16-10-2002
(புரட்டாதி 30, புதன்)
ஏகாதசி வை 5.53 வரை
அவிட்டம் மு.இ 9 12 வரை
இராகுகாலம்-12.02-1 32
நல்ல நேரம்-4.32-6 02
ஏகாதசி விரதம்

**மேடம்**
காரிய அனுகூலம்,குடும்ப மகிழ்ச்சி,தொழில் லாபம், புதிய முயற்சி

**இடபம்**
அதிகாரம்,தொழில் மேன்மை,நல்ல செய்தி,நண்பர்கள் உதவி

**மிதுனம்**
கட்டுப்படுதல், புதியசிந்தை குடும்ப சுகம்,முயற்சிதாமதம்

**கடகம்**
எதிர்பாராத பிரச்சினை, வியாபார விருத்தி,வாகன பயம் காரிய தாமதம்

**சிங்கம்**
களஸ்திரசுகம்,பிரயாண ...

## விவசாயக் குடும்பங்களுக்கு வேண்டிய உதவிகள்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் மீளக்குடியமர்ந்த விவசாயக் குடும்பங்களுக்குத் தொழில் உபகரணங்கள், விவசாய உள்ளீடுகள் என்பன வழங்கப்படவுள்ளன.

இதற்கான பயனாளிகள் தெரிவில் ஜி.ரி.சற் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

தெரிவு செய்யப்படும் பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்களும்விவசாயஉள்ளீடுகளான வெங்காயம், விதை நெல் என்பனவும்வழங்கப்படவுள்ளதாகதெரியவருகின்றது.

குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவில் பட்டினிக்கு எதிரான நிறுவனம் திட்டம் அமுல்படுத்திய 5 கிராம அலுவலர் பிரிவுகளை தவிர்த்து ஏனைய 19 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இப் பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது

(உ-75)

## அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 4 வருடங்களில்அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் வெளியிட்டிருக்கும் புள்ளிவிபரங்களின் அடிப்படையில், 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முகாமைத்துவ ஊழியர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரமாக இருந்தது. தற்போது அது இரண்டு இலட்சமாக அதிகரித்துள்ளது.

மத்திய தர ஊழியர்களின் எண்ணிக்கை வளர்ச்சி இதே காலப்பகுதியில் 3 இலட்சத்து 50 ஆயிரத்தில் இருந்து 5 இலட்சமாக உயர்ந்துள்ளது.

கீழ் மட்ட ஊழியர்கள் 2 இலட்சத்து 25 ஆயிரத்திலிருந்து.3இலட்சத்து 50 ஆயிரமாக உயர்ந்துள்ளது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

ஒருபெரியவர் அவனை நெருங்கினார். 'ஏனப்பா...எவ்வளவு புதைத்து வைத்திருந்தாய்?' என்றார். 'ஏராளமாக வைத்திருந்தேன்.எல்லாம் போய்விட்டது, என்றார். எப்போதாவது இங்கே வந்து பார்ப்பது உண்டா?' 'வாரம் தவறாது வருவேன்... பக்கத்தில் உட்கார்ந்து கொஞ்சநேரம் பார்த்துக் கொண்டிருப்பேன். பின் போய்விடுவேன்.

''எப்போதாவது இதில் இருக்கிற பணத்தை எடுத்துச் செலவு பண்ணியிருக்கிறாயா?... ''அவ்வப்போது வந்து அதைப்பார்ப்பது தான் வழக்கம். ஒரு நாளும் அதைத் தொட்டது. இல்லை!'' என்றான் அப்படி யென்றால்... இனிமேலும் அதேமாதிரி அவ்வப்போது வந்து பார்த்துக் கொண்டு போகலாமே! 'என்றார். என்ன சொல்லுகிறீர்கள்?' என்றான். எவ்வளவு காலம் ஆனாலும் நீ இந்தப் பணத்தை எடுத்துச் செலவு செய்யப் போவதில்லை. அப்படி இருக்கும்போது...இங்கே பூமிக்குள்ளே அந்தப் பணம் இருப்பதும் ஒன்றுதான்... இல்லாததும் ஒன்றுதான்' என்றார்.

பெரியவரின் வார்த்தைகள் அவனைச் சிந்திக்கவைத்தன. அவனுக்குப் புரிந்தது. ஒருவரிடம் இருக்கிற பணத்தைக் கொண்டுஅவர் பணக்காரரா, ஏழையா என்று முடிவு செய்வது சரியாக இருககாது. அந்

...சரமாக அதைப் பிரித்தார். அந்தப் பையில் இருந்தவை விலையுயர்ந்த முத்துக்கள். இந்த நிலையில் தான் அவருக்கு ஒர் உண்மை புரிந்தது.

'விலை உயர்ந்த முத்துக்கள் கூட சாப்பிடுவதற்குஉணவாக முடியாது என் பதைப் புரிந்துகொண்டார்எந்த நேரத்தில்எதுநமக்குத்தேவையோ அது நமக்குத் தாராளமாகக் கிடைக்க வேண்டும். அப்படி அது கிடைப்பதற்கு நம்மிடம் இருக்கிற செல்வம் யயன்பட வேண்டும். அது நமக்கும் பயன்படலாம். நம் மூலமாக அடுத்தவர்களுக்கும் பயன் படலாம்,அது தான் செல்வத்தின் பயன்.

ஒருமரத்தடியில் ஒருவன் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தான் அந்தப்பக்கமாக வந்த இன்னொருவன்' ஏனப்பாஅழுதுகொண்டிருக்கிறாய்?'எனறு கேட்டான். இந்தஇடத்திலேதான் பூமிக்கு அடியில் பணம் இருக்கிறது. வைத்த இடம்தெரியவில்லை. அது தான் அழுகிறேன்' என்றான்அவன். 'நன்றாக ஞாபகப் படுத்திப் பார். எந்த இடத்தில் புதைத்தாய்' என்றான் இவன். 'அது எப்படி எனக்குத் தெரியும்? என்றான் அவன். 'ஏன்?என்றான்இவன் புதைத்துவைத்திருக்கிறவன் நான் இல்லை. எங்கள் எதிர் வீட்டுக்காரன்? 'என்றான் அவன்.

தென்கச்சிகோ.சுவாமிநாதன்

# தீவக மாணவர்களுக்கு கணனிப் பயிற்சி

(கொக்குவில்)

மாணவர்களுக்கு நவீன தொழில் நுட்ப அறிவைவழங்கும் நோக்குடன்,தமிழ் தகவல் தொழில் நுட்ப அமைப்பானது,தீவக வலய ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்

(6-ம் பக்கம் பார்க்க)

புதிய முயற்சி

**இடபம்**

அதிகாரம்,தொழில் மேன்மை,நல்ல செய்தி,நண்பர்கள் உதவி

**மிதுனம்**

கட்டுப்படுதல், புதியசிந்தை குடும்ப சுகம்,முயற்சிதாமதம்

**கடகம்**

எதிர்பாராத பிரச்சினை, வியாபார விருத்தி,வாகன பயம் காரிய தாமதம்

**சிங்கம்**

களஸ்திரசுகம்,பிரயாண நன்மை,செய் தொழில் மேன்மை, முயற்சி பலிதம்

**கன்னி**

மனமகிழ்ச்சி,புதியதொழில் சிந்தை,விருந்துபசாரம், காரிய அனுகூலம்

**துலாம்**

குடும்பக்கவலை,சிறுவியாதி காரிய தாமதம்,வியாபார வருமானம், அதிகரிக்கும்

**விருச்சிகம்**

தன்னம்பிக்கையின்மை, அற்ப உறவு, உறவினர் வருகை,எதிர்பாராத நன்மை

**தனுசு**

புதியபொருள் சேர்க்கை, நல்லசம்பவம்வாக்குமேன்மை முயற்சி கைகூடும்

**மகரம்**

செல்வாக்கு குறைவு,உடல் களைப்பு,முயற்சி தாமதம் தனவிரயம்

**கும்பம்**

பெரியோரால்,மதிக்கப் படல்,அதிகபிரயாசை,கற்பனைமிகுதி,முயற்சிகைகூடும்

**மீனம்**

கோபப்படுதல்,முயற்சி தாமதம், ரோக பயம்,

(பழைய நேரப்படிகணிப் பிடப்பட்டது)

வளவன்

(கொழும்பு)

கடந்த 4 வருடங்களில்அரச ஊழியர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

நிதியமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் வெளியிட்டிருக்கும் புள்ளிவிபரங்களின் அடிப்படையில், 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் முகாமைத்துவஊழியர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரமாக இருந்தது. தற்போது அது இரண்டு இலட்சமாக அதிகரித்துள்ளது.

மத்திய தர ஊழியர்களின் எண்ணிக்கை வளர்ச்சி இதே காலப்பகுதியில் 3 இலட்சத்து 50 ஆயிரத்தில் இருந்து 5 இலட்சமாக உயர்ந்துள்ளது.

கீழ் மட்ட ஊழியர்கள் 2 இலட்சத்து 25 ஆயிரத்திலிருந்து.3இலட்சத்து 50 ஆயிரமாக உயர்ந்துள்ளது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. (உ-8)

# கிளிநொச்சி நகரை நவீனமயப்படுத்தும் திட்டம் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரம் நவீனமயப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய கண்டி ஏ-9 வீதி, டிப்போ வீதி ஆகியவற்றின் இரு மருங்கிலும் உஅள கடைகள் கட்டடங்களை வீதியில் இருந்து 65 அடிக்கு அப்பால் நகர்த்துமாறு கரைச்சி பிரதேச சபையின் விசேட ஆணையாளர் எஸ். பத்மாநாதன் அவசரவேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை, கிளிநொச்சி நகரப் பகுதியில் உள்ள காணிகளை விற்கவோ, வாங்கவோ மாவட்ட அரசாங்க அதிபர் தடைவிதித்துள்ளார்.

இதேவேளை நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிமனை ஒன்றும்கிளிநொச்சியில் திறக்க ஏற்பாடாகியுள்ளது. (உ-264)

# சுசந்திகாவை வெல்வதே சரஸ்வதிஷாவின் ஆசை

(கொழும்பு)

பூஷானில் இடம் பெற்ற பெண்களுக்கான 200 மீற்றர் இறுதிப்போட்டியில் சுசந்திகாவை தோற்கடிக்கும் முயற்சியிலேயே கலந்துகொண்டேன்என இந்தியவீராங்கனை சரஸ்வதிஷா தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், சுசந்திகா உண்மையில் வலிமையான வீராங்கனை தான் அவருடன் இப்போட்டியில் கலந்துகொள்வதே பெருமைக்குரிய விடயம்.

ஆயினும், அவர் காலில் ஏற்பட்ட தசைப்பிடிப்பு காரணமாக போட்டியில் கலந்துகொள்ளாதது எனக்கு ஏமாற்றத்தையளித்துள்ளது என மேலும் தெரிவித்துள்ளார். (உ-3)

# இலங்கையின் அரசியல் மீண்டும் நிச்சயமற்றநிலைக்குசென்றுள்ளது

## அரசியல் ஆய்வாளர் கருத்து

(கொழும்பு)

**இலங்கை அரசியல் மீண்டுமொரு தடவை நிச்சயமற்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்காக அரசாங்கம் முன்வைத்துள்ள அரசியல் யாப்பு மாற்றம் குறித்து உயர்நீதிமன்றம் வெளியிடவுள்ள தீர்ப்புடன் தொடர்புள்ளதாகவும் காணப்படுகின்றது.**

தற்போதைய நிச்சயமற்ற நிலை, எதிர்பார்க்காத பல விடயங்கள் இடம் பெறக் கூடிய சாத்தியங்களை உண்டு பண்ணியுள்ளதுஎன அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

19 வது அரசியல் மாற்றத்தை பாராளுமன்றத்தில் அமுல்படுத்த முடியாத பட்சத்தில் அரசாங்கம் புதியதேர்தல் ஒன்றைசந்திப்பதுகுறித்துசிந்திக்கலாம்அல்லதுஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைப்பதற்கான மேலும் தீவிர முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

### புதிய தேர்தல் அறிவிப்பு

பாராளுமன்றம் தனது தீர்மானத்தின் மூலம் ஜனாதிபதியை புதிய தேர்தலொன்றிற்கான அறிவிப்பை வெளியிடுமாறு கேட்கலாம்.

இதன் காரணமாக மூன்று வருட காலப்பகுதியில் மூன்றாவது தேர்தலை இலங்கை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இதனை இலங்கையின் பொருளாதாரத்தால் எதிர் கொள்ளமுடியாது.

டிசம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுவார் என்பதே அரசின் முக்கிய எதிர்பார்ப்பாக உள்ளது

இதனைத் தவிர்ப்பதற்கு ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணையை கொண்டுவருவது குறித்து அரசாங்கம் சிந்திக்கலாம்.

### பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது

பாராளுமன்றத்தில் அரைவாசிக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இத்தீர்மானத்தில் கையெழுத்திட வேண்டும். சபாநாயகர் இதனை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

19 வது அரசியலமைப்புமாற்றத்தை நிறைவேற்றுவதற்கு அரசிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படலாம்.

225 பேரைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி முஸ்லிம் காங்கிரஸின் 5 உறுப்பினர்களுடன் இணைந்துதற்போது பெரும்பான்மை பலம் பெற்றுள்ளது.

19 வது அரசியலமைப்பு மாற்றத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

எனினும் அரசிற்கு இன்னும் 21பேரின் ஆதரவு தேவையாகஉள்ளதுஇதற்காகபொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவு அரசிற்கு தேவைப்படுகிறது.

### உச்ச நீதிமன்ற தீர்ப்பை எதிர்பார்ப்பு

இதனை அடிப்படையாக வைத்தே 19 ஆவது அரசியலமைப்பு மாற்றத்தில் மனச்சாட்சிப்படி வாக்களிப்பதற்கான பிரிவுகள் அடங்கியுள்ளன.

இதனடிப்படையிலேயே அரசு உச்சநீதிமன்ற தீர்ப்பிற்காக காத்திருக்கின்றது.

உயர்நீதிமன்றம் குறிப்பிட்ட பிரிவிற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என கூறுமா? என்பது குறித்து அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

உயர் நீதிமன்றம் மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் பிரிவை ஏற்றுக்கொள்ள மறுப்பின் அரசாங்கம் புதிய தேர்தல் ஒன்றை சந்திக்க வேண்டிய நிலைக்கோ அல்லது ஜனாதிபதிக்கு எதிராக குற்றவியல் பிரேரணையை கொண்டு வரும் நிலைக்கோ தள்ளப்படலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் மேலும் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ-3)

## பொதுக் கூட்டம்

(ஊர்காவற்றுறை)

வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகம், ஐயனார் சனசமூக நிலையம் ஆகியவற்றின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறவுள்ளது. (உ-75)

## புத்தாயிரமாம் ஆண்டு புலமைப்பரிசில் வழங்கல் வைபவம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கான ஜனாதிபதி புலமைப் பரிசில் வழங்கும் வைபவம் மறு அறிவித்தல்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் தற்போதைய நிலைமைகளை கருத்தில் கொண்டே இவ்வைபவம் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாணகல்வி அமைச்சின் செயலாளர் கே.சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை கடற்படைத்தளத்தில் நேற்று நடைபெறவிருந்தஇவ்வைபவத்தில், இம்மாகாணங்களை சேர்ந்த 300 மாணவர்களுக்கு ஜனாதிபதிசந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க இப்புலமைப்பரிசில்களைவழங்கஇருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மின்சாரசபையின்பங்குகளை புலிகள் கொள்வனவு செய்ய வாய்ப்புண்டாம்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபையை மறைமுகமாக தனியார் மயப்படுத்தும் நடவடிக்கை மூலம் விடுதலைப்புலிகள் கூட இலங்கை மின்சார சபையின் 50 சதவீத பங்குகளை கொள்வனவு செய்து சபைக்கு உரிமை கோரமுடியும் என்று கம்பஹா மாவட்ட பொ.ஐ. முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் பீலிக்ஸ் பெரேரா சபையில் தெரிவித்துள்ளார்.

மின்சார சபை திருத்தச் சட்டமூலத்தின் மீதான விவாதத்தை எதிர்க்கட்சி சார்பில் ஆரம்பித்து வைத்து பேசுகையில் இலங்கை மின்சார சபைக்கு வருமானமாகக் கிடைக்க வேண்டிய கடன்கள் பல உள்ளன இவற்றை உரிய முறையில் திரட்டுவதனால் பல சிக்கல்களைத் தீர்க்க முடியும்.

எனவே தனியார்மயப்படுத்தல் தேவையற்றது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-7)

## அடுத்த ஆண்டு193 நாட்கள் பாடசாலைகள் இயங்கும்

(கொழும்பு)

2003 ஆம் ஆண்டுக்கான பாடசாலைத் தவணை2002-22 ஆம் சுற்று நிருபம் மூலம் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி வருடத்தில் குறைந்தது 193 நாட்கள் பாடசாலை நடத்தப்படல் வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது

தமிழ் சிங்களப் பாடசாலைகளின் முதலாம்தவணை2003 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி வரையும் இரண்டாம் தவணை 2003 மேமாதம் 19 ஆம் திகதிமுதல் ஆகஸ்ட் 8 ஆம் திகதிவரையுபமூன்றாம் தவணை 2003 ஆகஸ்ட் 25 ஆம் திகதி முதல் நவம்பர் 28 ஆம் திகதி வரையும் நடைபெறும்.

விடுமுறை நாட்களிலும் அரசினால் அறிவிக்கப்படும் நாட்களிலும் சனி,ஞாயிறு தினங்களிலும் சகல பாடசாலைகளும் மூடப்படும் ஏனைய நாட்களில் கட்டாயம் பாடசாலை நடத்தப்பட வேண்டும்.

மாகாண கல்வி அமைச்சுக்கள் இவ் அட்டவணையில் மாற்றம் செய்யத்தேவைப்படின் 97-15 ஆம் இலக்க சுற்று நிருபத்திற்கமைய செய்து கொள்ளலாம்.

இதேவேளை பாடசாலைகள் மூடப்படின் பதில் பாடசாலைகள் நடத்தப்படல் வேண்டுமெனவும் அறிவிக்கப் பட்டுள்ளது. (உ-7)

## நீர்கொழும்பு சிறையில் பஞ்சாப் இளைஞர்கள்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலையில் நீண்டகாலமாகத்தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்தியாவின் பஞ்சாப்மாநிலத்தைச் சேர்ந்த14 இளைஞர்களை விடுவிக்க கொழும்பிலுள்ளஇந்தியஉயர்ஸ்தானிகராலயம்நடவடிக்கை எடுத்துள்ளது.

வெளிநாடுகளில் வேலைவாய்ப்பினைப் பெற்றுத்தருவதாகக் கூறி போலி வேலைவாய்ப்பு முகவர்களால்கைவிடப்பட்டவர்களே இப்14 பேரும் என தெரிவிக்கப்படுகிறது. (உ)

## திருமலைப் படுகொலை இரகசியப் பொலிஸ் விசாரணை ஆரம்பம்

(கொழும்பு)

திருகோணமலையில் அண்மையில் இடம் பெற்ற சம்பவங்கள் குறித்து இரகசியப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கமைய இரகசியப் பொலிஸ் பிரிவின் உயர் அதிகாரிகளை கொண்ட குழுவொன்று நேற்று முன் தினம் திருகோணமலைக்கு சென்று முதல் கட்ட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் பணிப்புரையின் பேரிலேயே இரகசியப் பொலிஸார் திருகோணமலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தின்பின்னணி, மற்றும் இதில் யார் யார் ஈடுபட்டார்கள் என்பவற்றின் விபரங்களை இரகசியப் பொலிஸார் கண்டறியவுள்ளனர். (உ-8)

## வெள்ளைப் பிரம்பு தினம்

(யாழ்ப்பாணம்)

'வாழ்வகம்' விழிப்புலவலுவிழந்தோர் இல்ல, சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமும் கலை விழாவும் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு யா/இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

'வாழ்வகம்' உப தலைவரும் ஆசிரியருமான ஆ.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஆசியுரையை செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன், வாழ்வகம் நிர்வாகி செல்வி ஆ.சின்னத்தம்பி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக யா/யூனியன் கல்லூரி அதிபர் க. புண்ணியசீலன், யா/இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ)

## ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்துமகளிர் கல்லூரியில் இடம் பெறவிருந்த வடக்கு-கிழக்கு மாகாண மட்ட ஆங்கிலதினப் போட்டிகள் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-19)

## மிதிவெடி அபாயம் தீரவில்லை

(தென்மராட்சி)

மிதிவெடிகள் இருக்கலாம் என்ற அச்சம் காரணமாக மட்டுவில்- மானாவளைப் பகுதியிலுள்ள வயல்களைஅப் பகுதி விவசாயிகள் இன்னமும் பண்படுத்தாமல் இருந்து வருகின்றனர்.

மிதிவெடி அச்சம் காரணமாக இவ்வலயங்களில் இம்முறையும் நெற்பயிர்ச் செய்கை செய்யக்கூடிய வாய்ப்புகள் இல்லாமல் இருப்பதாக இப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர். (உ-77)

## பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை வழக்கு விசாரணை ஒத்தி வைப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளரான மயில்வாகனம் நிமலராஜன் கொலை தொடர்பானவழக்கு விசாரணை முக்கியசாட்சிசமுகமளிக்காதமையினால் எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வழக்கு நேற்று முன்தினம் யாழ்.நீதிமன்றில் நீதிபதிஇ.த விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது,

மேற்படி கொலைச்சம்பவத்தின் முக்கிய சந்தேக நபர்களான ஜெகதீஸ்வரன் சிந்துபரன்,பழனிச்சாமி விஸ்வன், டேவிற்மைக்கல், கொலின் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த போதும் முக்கிய சாட்சியாளரான குற்றப் புலனாய்வு பொறுப்பதிகாரி ரஞ்சித் டி சில்வா ஆஜராகத் தவறியதை அடுத்து இவ்வழக்கு விசாரணைஇம்மாதம் 28ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (உ-10)

---

### தீவக

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தியில் கணனிப் பயிற்சி வகுப்புக்களை நேற்று முன் தினம் முதல் ஆரம்பித்துள்ளது.

தரம் 9-13 வரையான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இதனால் பயனடையவுள்ளனர். (உ-23)

## கல்விப் பொதுத் தராதரப்பத்திர(சாதாரணதர)மாதிரிப் பரீட்சை - 2002
## General Certificate of Education (Ord. Level) Model Examination - 2002

சைவசமயம் - I ஒரு மணித்தியாலம்

கவனிக்க: (1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
(2) 1 முதல் 40 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியானது அல்லது மிகப்பொருத்தமானது என நீங்கள் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க.

01. கஜமுகாசுரனை வதம் செய்தவா,
(1)பிள்ளையார் (2) சிவன் (3) துர்க்கை (4) முருகன்
02. சிவனின் திருவுருவக் கோலங்கள்,
(1) மூன்று (2) ஐந்து (3) ஏழு (4) ஒன்பது
03. உலோகங்களால் வார்க்கப்படும் திருவுருவங்கள்,
(1) சித்திரம் (2) சித்திராபாசம் (3) சித்தார்த்தம் (4) வாமனம்
04. இருக்கு வேதத்தில் சிவனைக் குறிக்கும் பெயர்,
(1) சோமர் (2) வர்ணன் (3) இந்திரன் (4) உருத்திரன்
05. பிரதோஷ காலத்தில் வழிபட வேண்டிய கடவுள்,
(1) இடபாரூடர் (2) சிவலிங்கம் (3) தட்சணாமூர்த்தி (4)நடராஜர்
06. வேதசிரசு என சிறப்பிக்கப்படுவது,
(1) வேதம் (2) ஆகமம் (3) உபநிடதம் (4) தேவாரம்
07. மன்னார் மாவட்டத்தில் அமைந்த சிவத்தலம்,
(1)நகுலேஸ்வரம் (2) கோணேஸ்வரம் (3) முன்னேஸ்வரம் (4) கேதீஸ்வரம்
08. இறைவன் ஊழிக் காலத்தின் இறுதியில் ஆடிய கூத்து,
(1) கொடுகொட்டி (2) பாண்டரங்கம் (3)கபாலம் (4) சந்தியா
09. காரணம் கருதிச் செய்யப்படும் பூசை,
(1) நித்தியபூசை (2)நைமித்திய பூசை (3) விசேட பூசை (4) திருவனந்தல்பூசை
10. சிவ விரதங்கள் அல்லாதது,
(1) சிவராத்திரி (2) பிரதோஷம் (3) திருக்கார்த்திகை (4) திருவாதிரை
11. "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்......"எனும் பாடலைப்பாடிவர்,
(1) மாணிக்கவாசகர் (2) பதஞ்சலி (3) சம்பந்தர் (4) அப்பர்
12. கொலுவைத்தலுடன் சம்பந்தப்பட்ட விரதம்,
(1) கந்தசஷ்டி (2)கேதாரகௌரி (3) நவராத்திரி (4) திருவெம்பாவை
13. தாதையைத் தாளற வீசிய சண்டியானவர்,
(1) சண்டியர் (2) சண்டீஸ்வரர் (3) தாதையர் (4) முருகன்
14. கந்தரலங்காரம் பாடியவர்,
(1)கச்சியப்பர் (2) தாயுமானவர் (3) அருணகிரிநாதர் (4) குமரகுருபரர்
15. மூவகையான்மாக்களிலும் காணப்படுவது,
(1) ஆணவம் (2) கன்மம் (3) மாயை (4) பதி
16. "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே மாதொருபாகனார் தாம் வருவார்". மாததொருபாகன் எனப்படுபவர்,
(1) முருகன் (2) சிவன் (3) விஷ்ணு (4) பிள்ளையார்
17. திருவருட்பயனில் உள்ள அதிகாரங்கள்,
(1) 8 (2) 10 (3) 14 (4) 12
18. பொல்லாப்பிள்ளையார் கோயில் உள்ள இடம்,
(1) சீர்காழி (2) காஞ்சி (3) திருவாரூர் (4) திருநாரையூர்
19. மனிதன் மனிதனாக வாழ வழி காட்டுவது,
(1) தமிழ் (2) கணிதம் (3) விஞ்ஞானம் (4) சைவசமயம்
20. மணிவாசகர் அவதரித்த ஊர்,
(1) திருவாரூர் (2)திருவாதவூர் (3)திருநாவலூர் (4) திருப்பெருந்துறை
21. சிவன் கோயிலின் கருவறையின் வெளியே மேற்குப் பக்கச்சுவரில் இருக்கும் மூர்த்தம்,
(1)நர்த்தனகணபதி (2)தட்சணாமூர்த்தி (3)இலிங்கோற்பவர் (4) பிரமா
22. இலங்கையிலே மண்டோதரி வழிபட்ட சிவத்தலம்,
(1)கோணேஸ்வரம் (2)முன்னேஸ்வரம் (3) கேதீஸ்வரம் (4) நகுலேஸ்வரம்
23. சித்தாந்த அட்டகத்தை அருளியவர்,
(1)மெய்கண்டர் (2)உமாபதி (3)அருணந்தி (4)மறைஞான சம்பந்தர்
24. சங்ககால வழிபாட்டுத் தெய்வங்களில் ஒன்று,
(1)பெரியதம்பிரான் (2)காளி (3)சிவன் (4) ஐயனார்
25. அடங்கன் முறை என அழைக்கப்படுவது,
(1) தேவாரம் (2) திருவாசகம் (3) திருவிசைப்பா (4) திருப்புராணம்
26. "கடையவனேனைக் கருணை....." எனும் பாடல் பாடப்பட்ட தலம்,
(1)திருப்பைஞ்ஞீலி (2)உத்தரகோசமங்கை (3) திருப்பெருந்துறை (4) சீர்காழி
27. சிருஷ்டி விநாயகர் மோதகம் ஏந்திய கை குறிப்பது,
(1) படைத்தல் (2) காத்தல் (3) மறைத்தல் (4) அருளல்
28. சிவதொண்டன் நிலையத்தை அமைத்தவர்,
(1)ஆறுமுகநாவலர் (2)கடையிற்சுவாமிகள் (3)விபுலானந்தர் (4)யோகர் சுவாமிகள்
29. மார்க்கண்டேய படலத்தின் காவியம் மலர் கருத்த... படலடியன். பங்கயச் சதுர்முகத்தன் எனப்படுபவர்,
(1) பிரமா (2) விஷ்ணு (3) உருத்திரன் (4) சிவன்
30. •தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இலிங்கம்,
(1) தைவிகலிங்கம் (2)ஆரிடலிங்கம் (3) காணலிங்கம் (4) தாவரலிங்கம்
31. சமய குரவர்களுள் காலத்தால் முற்பட்டவர்,
(1) அப்பர் (2) சுந்தரர் (3) சம்பந்தர் (4) மாணிக்கவாசகர்
32. வடக்கில் பிதிர்க்கடன் செய்த கீரிமலை போல் கிழக்கில் புனிதமான இடம்,
(1)மண்டூர்முருகன் (2)மாமாங்கப்பிள்ளையாா
(3)சித்தாண்டிமுருகன் (4) கொக்கட்டிச்சோலை
33. அகக் கண் திறந்தவரே கண்ணுடையர் அல்லாதோர் பகற்குருடு எனக் கூறியவர்,
(1) மெய்கண்டர் (2) குமரகுருபரர் (3) மறைஞானசம்பந்தர் (4)உமாபதி
34. தம்பிதனக்காக வனத்தில் அணைந்தவன்,
(1) இராமன் (2) பிள்ளையார் (3) அர்ச்சுனன் (4) சூரன்
35. "கொண்டல் வண்ணனும் குலிச பாணியும்......." என்னும் பாடலில் புண்டரீக மேற்பொலிந்த போதன் யார்?
(1) பிரமா (2) விஷ்ணு (3) இந்திரன் (4)பூமாதேவி
36. பிறருக்கு தீட்சை அளிக்க கூடிய தகுதியுடையவர்,
(1) ஐயர் (2) பிராமணர் (3) சிவாச்சாரியார் (4) ஞானியார்
37. இரவிகுல மாணிக்க ஈஸ்வரத்தைக் கட்டியவன்,
(1)இராஜராஜசோழன் (2)உத்தமசோழன் (3)இராயேந்திர சோழன் (4)விஜயபாகு
38. கோட்டை அரசனின் வளர்ப்பு மகன் செண்பகப் பெருமாள் அமைக்காத ஆலயம,
(1) நல்லூர் கந்த சுவாமி கோயில் (2) நீர்வேலி அரச கேசரிப் பிள்ளையார்
(3) கைலாச நாதர் கோயில் (4) மாவிட்டபுரம் கந்தசுவாமி
39. கல்வளையந்தாதி பாடியவர்,
(1) சின்னத்தம்பிப்புலவர் (2) சேனாதிராச முதலியார்
(3) கணபதி ஐயர் (4) முத்துக்குமாரக் கவிராஜா
40 சமய குரவர்களின் பெருமையைக் கூறும் சித்தாந்த நூல்,
(1) சிவப்பிரகாசம் (2) சிவஞான போதம்
(3) உண்மை விளக்கம் (4) திருக்களிற்றுப் படியார்

சைவசமயம் II இரண்டு மணித்தியாலம்

### எட்டாம் வினா உட்பட 5 வினாக்களுக்கு விடை தருக

1. "செங்கதிர்த்தேவன் சேண் விளங்க வீரொளி"
1) வேதம் என்னும் சொல்லின் பொருள் யாது?
2) வேதங்களைக் குறிப்பிடுக.
3) வேதங்களின் பகுதிகளைக் கூறுக.
4) சதருத்திரியம் என்றால் என்ன?

2. "வாழி திருநாவலூர் வன்றொண்டன் பாதம் போற்றி"
1) வன்றொண்டன் என்பதன் கருத்து?
2) இவரின் இரண்டு மனைவிமார்களையும், அவர்கள் பிறந்த ஊர்களையும் கூறுக.
3) தாண்டக வேந்தன் என அழைக்கப்படுபவர் யார்?
4) இவர் செய்த அற்புதங்கள் 4ஐ எழுதி அதன்போது பாடப்பட்ட தேவார அடிக ளைக் குறிப்பிடுக.

03. "கலைஞானம் கற்குஞ்சரக்கன்று காண்"
1) திருவருட்பயன் ஆசிரியர் யார்?
2) இதன் முதல் 5அதிகாரங்களின் பெயரினைத் தருக.
3) ஒரு பொருளும் காட்டா... எனும் குறப்பாவை எழுதி அதன் பொருளை சுருக்க மாகத் தருக
4) ஆன்மா சதசத்து எனப்படுவதேன்? விளக்கம் தருக.

04. "நாவலர் பிறந்திலரேல் சொல்லு தமிழ் எங்கே..."
1) ஆறுமுகநாவலரின் 4பணிகள் தருக.
2) நாவலர் எழுதிய சமயநூல்கள் 5 தருக
3) இவர் நிறுவிய சைவசமய பாடசாலைகள் அமைந்துள்ள இடங்களைத் தருக.
4) நாவலரின் பின் சைவசமயப் பணியாற்றிய ஈழத்துப்பெரியார்கள் நால்வரைக் குறிப்பிடுக.

05. "கதிரமலை காணாத கண்ணென்ன கண்ணே.."
1) இப்பாடலில் குறிப்பிடப்படும் ஆலயம் எது? அதன் பெயர்க்காரணத்தைத் தருக.
2) மேற்கூறிய ஆலயத்தோடு தொடர்புடைய இரு ஆலயங்களையும், அமை விடத்தையும் குறிப்பிடுக.
3) சோழ இளவரசியால் கட்டப்பட்ட ஆலயம் எது? இதன் சிறப்புகள் 3கூறுக.
4) 25தினங்கள் மகோற்சவம் நடைபெறும் முருகன் ஆலயங்கள் 2 கூறுக.

06. "விரதத்தைப் போல் பண்டிகையும் சமய முக்கியத்துவமுடையது"
1) இந்துக்கள் கொண்டாடும் 6 பண்டிகைகள் தருக
2) தட்சணாயம், உத்தராணயம் என்னும் பதங்களை விளக்குக.
3) தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்புடைய கதையைத் தருக.
4) பண்டிகைகளில் நாம் செய்யும் முக்கிய கருமங்களைக் குறிப்பிடுக

07. பின்வரும் ஏதாவது நான்கிற்கு சிறு குறிப்புரை வரைக.
1) அம்மன் கோவில்கள் 2) பிராமணங்கள்
3) திருநாவுக்கரசர் 4) பசு
5) சிவபாதசுந்தரனார் 6) சந்தான குரவர்

08. பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதி, அவற்றின் பொழிப்புரையினையும் எழுதுக.
அ) நங்கடம்பனை... ஈ) சொல்லாண்ட சுருதி..!
ஆ) ஆத்தாளை எங்கள்.... உ) கரியகறைக் கண்டன்....
இ) செங்கணாபோற்றி....

ஆக்கம்
சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன்,
தாவடி இந்து.த.க.பாடசாலை

# மனிதன் நினைப்பதொன்று, வாழ்வில் நடப்பது வேறொன்று
# விஞ்ஞான ஆராய்ச்சியில் புதிய கருத்துக்கள் புலனாகின்றன

**மனிதன் வாழ்க்கையில் புரியும் செய்கைகள் பல பொதுவாக வினை - விளைவு முறையை ஒட்டியே இருக்கின்றன. நாம் ஏதாவது ஓர் அலுவலைச் செய்யும் போது அதற்கு ஒரு குறிப்பிட்ட விளைவு அல்லது பயன் உண்டாகும் என்று அறிந்தே அதனைச் செய்கிறோம் அறிவாராய்ச்சியிலும் அத்தகைய வழியையே அறிஞர்கள் பின்பற்றி, அரிய பல உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளனர்.**

விஞ்ஞானத்தின் வளர்ச்சியிலும் அந்த முறைக்குத் தனிச் சிறப்பிடம் ஒன்றுண்டு ஆயினும் வாழ்க்கையில் அவ்வப்போது எதிர்பாராத வகையில் சில சம்பவங்கள் நிகழ்ந்து விடுவதை நாம் பார்த்து வருகிறோம். வர•லாற்றில் இருந்து இதற்குச் சில எடுத்துக்காட்டுகள்,

### அமெரிக்காவை கனவிலும் காணாத கொலம்பஸ்

கொலம்பஸ் ஸ்பெயினில் இருந்து புறப்பட்டபோது, அமெரிக்காவைக் கண்டு பிடிக்கப் போவதாகக் கனவிலும எதிர்பார்க்கவில்லை. நேராக மேல திசையில் சென்றால், கிழக்கு இந்தியப் பகுதிகளுக்கு ஓர் குறுக்கு வழியைக் கண்டு பிடிக்கலாம் என்ற எண்ணத்துடன் தான் அவர் புறப்பட்டார். ஆனால் எதிர்பார்க்காத வகையில் அமெரிக்காவைக் கண்டு பிடிக்க நேர்ந்தது. அதைச தற்செ யல் என்று தானே சொல்ல வேண் டும்.

அம்மாதிரியே விஞ்ஞான ஆராய்ச சியிலும் புதிய கருத்துக்கள் பல தற்செயலாகவே நமக்குத் தெரிய வந்துள்ளன.

### நீர்த்தொட்டியில் கண்ட உண்மை

இன்று ஒவ்வொரு பள்ளிச் சிறுவனுக்கும் தெரிந்திருக்கும் "ஆர்கிமிடீஸ் தத்துவம்" முற்றிலும் எதிர்பாராத வகையில்தான் கண்டுபிடிக்கப்பட்டது.

பொற்கொல்லன் செய்து கொண்டு வந்த தங்கக்கிரீடத்தில் சிறிது வெள்ளிகலந்திருப்பதாகக் கேள்வியுற்ற அரசன், ஆர்கிமிடீஸிடம் அதன் உண்மையைக் கண்டு பிடிக்கும் படி சொன்னான்.

குளிப்பதற்காகத் தொட்டியினுள் இறங்கிய ஆர்கிமிடீஸ் தனது உடல் அமுங்க அமுங்க அதிகத் தண்ணீர் வெளியேறி வருவதைத் தற்செயலாகக் கவனித்தார், அவ்வளவுதான், "ஆர்கிமிடீஸ் தத்துவம்" தோன்றி விட்டது. குளக்கச் செல்வதற்கு முன், அரசனின் சந்தேகத்தை அப்போது தீர்த்து விடக்கூடும் என்று அவர் எண்ண வில்லை, ஆயினும், பிரச்சினையின் விடை எதிர்பாராத வகையில் அவருக்குக்கிடைத்து விட்டது.

### அப்பிள் உணர்த்திய அரிய தத்துவம்

கோள்களின் இயக்கங்களை ஆராய்ந்து கொண்டிருந்த நியூட்டன் ஒருநாள் தோட்டத்தில் புற்தரைமீது படுத்திருந்தார் மரத்திலிருந்து அப்பிள் பழம் கீழே விழுந்தது. அதைத் தற்செயலாகக் கவனித்தார் நியூட்டன். "கவர்ச்சி ஆற்றல்" என்னும் கருத்து அவருடைய மனத்திலே பளிச்சிட்டது. மண்ணையும் விண்ணையும் மிகச் சிறு கல்லையும், மாபெரும் கோள்களையும் இணைக்கும் கவர்ச்சி விதியை அவர் உலகிற்கு எடுத்துக் கூறினார்.

### மாதா கோயில் மணிக்கூடு

கலீலியோ ஊசல் பற்றிய விதியைக் கண்டு பிடித்ததும் தற்செயலாக நிகழ்ந்ததுதான். அப்போது அவர் பைனர் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். மாலை நேரம் தெருவில் நடந்து கொண்டிருந்த அவர், மாதா கோவில் ஒன்றைக் கண்டார். கண்டவுடன் கடவுளைத் தொழுதுவிட்டு வரலாம் என்று எண்ணியவாறு சற்றே சென்றால். பிரார்த்தனை முடிந்து எழுந்து நின்றவுடன் கூரையிலிருந்து தொங்கிக்கொண்டிருந்த விளக்கு ஊசலாடியதைத் தற்செயலா கவே அவர் கவனித்தார். ஊசல் ஒரு பக்கத்தில் இருந்து மற்றோர் பக்கம் செல்வதற்கான நேரம், இடமும் வலமும் அது போகும் வீச்சைப் பொறுத்ததன்று. அது ஊச லின் நீளத்தையே பொறுததிருக் கின்றது என்னும் விதி கண்டு பிடித்தார்.

### காளானில் கண்ட உண்மை

பெனிஸில்லின் மருந்தை அறியாதவர் எவரும் இக்காலத்தில் இருக்க மாட்டார்கள் அதைக்கண்டு பிடித்த பெருமை அலெக்ஸாண்டர் ப்பௌமிங் என்னும் நுண்ணுயிர் ஆராய்ச்சி வல்லுனருக்கு உரியதாகும். அவர் அதைக் கண்டு பிடித்த தும் தற்செயலாகத்தான் நிகழ்ந்தது.

அ.நடராஜன்
(பி.எஸ்.ஸி)

சீழ் உண்டாக்கும் நுண்ணுயிர்கள் இருந்த பாத்திரத்தின் ஓரத்தில் ஒருவகைக் காளான் இருந்தது. காளானுக்கு அருகில் உள்ள நுண்ணுயிர்கள் எல்லாம் கொல்லப்பட்டதை அவர் தற்செயலாகக் கவனித்தார். அவர் உட்னே அதைத் தூக்கி எறிந்து விடாமல் காளானிலிருந்து நுரை ஏற்படு மாறு செய்தார் அந்த நுரையில் இரு ந்து தயாரிக்கப்பட்ட ஒரு பொருள் நோயினை உண்டாக்கும் நுண்ணுயிர்களைக் கொனறு விடுவதை அவதானித்தார்.

மேலும் பிராணிகளின் உடலிலினுள் அதைச் செலுத்திய போது. அவற்றுக்கு ஒரு தீங்கும் உண்டாகவில்லை. பென்ஸில்லியம் என்னும் காளான் வகையில் இருந்து அது தயாரிக்கப்படுவ தால் அதற்கு பென்ஸில்லின் என்று பெயரிடப் பட்டது.

இவ்வாறு விஞ்ஞானத்தின் வரலாற்றிலே தற்செயலாகப் பல உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதில் இருந்து திட்டமான ஆராய்ச்சி முறையும் தளராத உழைப்பும் விடாமுயற்சி யும் விஞ்ஞானத்தின் வளர்ச்சிக் குத தேவையில்லை என்று நினைத தால் அது பெரும் தவறாகும். தற செயலாகப் பல நிகழ்ச்சிகள் நடப்பதைப் பலரும்தான் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவற்றின் சிறப்பையம் கருத்தையும் விஞ்ஞான முறையில் தேர்ச்சியடைந்தவர்களால்தான் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆர்கிமிடீஸுக்கு வெகு காலதத்திற்கு முன்னரே மக்கள தொட்டிகளில இறங்கிக் குளித்திருக்கின்றனர். அங்ஙனமே நியூட்டனுக்கு முன்னரும் பழங்கள் மரத்தில் இருந்து விழுவதை எல்லோரும் கவனித்து வந்திருக்கின்றனர்.

ஆனால், தேர்ச்சியடைந்த விஞ்ஞான மனப்பான்மையுடைய ஆர்க்கிமிடீஸுக்கும், நியூட்டனுக்கும் தான் அந்த நிகழ்ச்சிகளின் முழுக் கருத்தும் புரிந்தது. தற்செயலாகத் தோன்றும் கருத்துக்களை உள்ளத்திலே தெளி வாக ஏற்றுக்கொண்டு விஞ்ஞான முறையிலே பாடுபட்டு ஆராய்ச்சி செய்தால்தான் புதிய கருத்துக் கள் புலனாகும். விஞ்ஞானமும் தழைத்தோங்கி வரும்.

### முகாம் வாழ்க்கைக்கு முடிவில்லையா?

# குடாநாட்டில் 85 நலன்புரி நிலையத்தில்

# 8237 பேர் தொடர்ந்தும் தங்கியிருப்பு

(தென்மராட்சி)

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு இயல்பு வாழ்க்கையைநோக்கி குடா நாடு முன்னேறி வருகின்றபோதும்இடம்பெயர்ந்த குடும்பங்களின்முகாம் வாழ்க்கைக்கு இன்னமும் முற்றுப்புள்ளி ஏற்படவில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள எட்டு பிரதேச செயலர் பிரிவுகளில் இன்னமும் 85 இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் மொத்தமாக 2ஆயிரத்து 5 குடும்பங்களைச்சேர்ந்த8ஆயிரத்து 237 பேர் வாழ்ந்து வருகின்றனர்.

இதில் 1990இல் இடம் பெயர்ந்த குடும்பங்களும் 2000 ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்த குடும்பங்களும் உள்ளடங்கியுள்ளன.

சங்கானை,சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை நல்லூர் ஆகியஎட்டு பிரதேச செயலர்கள் பிரிவுகளிலுள்ள 48 முகாம்களில் 1990ல் இடம் பெயர்ந்த ஆயிரத்து 677 குடும்பங்களைச்சேர்ந்த 6ஆயிரத்து 757 பேரும்.

சங்கானை,சண்டிலிப்பாய், உடுவில்,கரவெட்டி, பருத்தித்துறை, நல்லூர் ஆகிய ஆறு பிரதேச செயலர்கள் பிரிவிலுள்ள 37 முகாம்களில் 2000 ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்த 328 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 480 பேரும் தங்கியுள்ளனர் என அண்மையில்திரட்டப்பட்ட புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

இதில் பலாலி,மயிலிட்டி, தெல்லிப்பழை போன்றஇடங்களில் இருந்து 1990 காலப் பகுதியில் இடம்பெயர்ந்த குடும்பங்கள் 48முகாம்களிலும்,

2000 ஆம் ஆண்டில் தென்மராட்சி மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேசங்களில்இருந்து இடம்பெயர்ந்த குடும்பங்கள் 37 முகாம்களில் தங்கியுள்ளனர் என அறியப்படுகின்றது.

(உ-77)

# கடற்றொழிலாளர் குடும்பங்கள்

# குடியிருக்க இடமின்றி அவலர்

### கடற்றொழிலாளர் கூ. சே. சமாசத் தலைவர் சுட்டிக்காட்டு

(தென்மராட்சி)

இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்ட போதிலும் கூட, வட பகுதி கடற்றொழிலாளர்களால் சுதந்திரமாகத் தமது தொழிலைச் செய்ய முடியாத நிலையே காணப்படுகின்றது. எனவே கடற்றொழில் அமைச்சு இது விடயத்தில் கடற்றொழிலாளர்களின் பிரச்சினைகளை விரைவில் தீர்த்து வைக்க ஆவன செய்ய வேண்டும். என யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரான எஸ்.தவரட்ணம் யாழ். அரச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற கடற்றொழிலாளர்களுக்கான கூட்டத்தில் தெரிவித்தார்.

யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடை பெற்ற இக் கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சின் நீரியல் வள அபிவிருத்தி அதிகார சபையின் உபதலைவர் பீ. எஸ். எஸ். கலப்பதி அமைச்சின் பணிப்பாளர் எச். வீ.சி.பெர்னாண்டோ, உதவிப்பணிப்பாளர் ஏ.ஜோசப் ஆகியோர் பங்கு பற்றியிருந்தனர்.

யாழ் மாவட்டத்தின் பல இடங்களில் இருந்து கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

யாழ்ப்பாணக் குடா நாட்டின் கரையோரப் பகுதிகளில் இருந்த கடற்றொழிலாளர்களின் குடியிருப்புகள் யாவும் கடந்த காலத்தில் இடம் பெற்ற யுத்த நடவடிக்கைகளின் போது அழிக்கப்பட்டுள்ளன. ஆதலால் இத்தகைய குடும்பங்கள் இருக்க இடமின்றிப் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளன.

அத்துடன், மாதகல் முதல் தொண்டமானாறு வரையிலான இடத்தில் இருந்த கடற்றொழிலாளர்கள் கடந்த 12 வருடங்களாக தமது இருப்பிடங்களில் வாழ முடியாதவர்களாக இருக்கின்றனர். எனின் கடற்றொழில் அமைச்சர் தமது முயற்சியினால் இக் குடும்பங்களை மீளவும் அங்கு குடியமர்த்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

அத்துடன் வட பகுதி கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி நவீனத்துவ முறையில் கடற்றொழிலை விரிவாக்கம் செய்வதற்கும் ஏற்ற வழிவகைகளைச் செய்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

(உ-77)

# குற்றச் செயல்களை தடுக்க விசேட பொலிஸ் பிரிவு

(கொழும்பு)

குற்றச் செயல்களை சட்டுப்படுத்துவதற்காக விசேட பொலிஸ் பிரிவு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் ஏ.ரி. ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் அமைக்கப்படவுள்ள இப்பிரிவில் விசேட பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட விருப்பதாக குற்றத் தடுப்புப்பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஏச்-என் ஸ்ரீசேனஹேரத் தெரிவித்துள்ளார்.

(உ-8)

### சண்டிலிப்பாய் பி. செ.பிரிவில்

# சுமார் 1300 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்தன

(தென்மராட்சி)

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகியமாவட்டங்களுக்கு யுத்தம்காரணமாக இடம் பெயர்ந்துசென்ற ஆயிரத்து 293 குடும்பங்களைச்சேர்ந்த 4 ஆயிரத்து 500 பேர் சண்டிலிப்பாய் பிரதேசசெயலர் பிரிவில் மீளவும் குடியமர்ந்துள்ளனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் தங்கியிருந்த 2 ஆயிரத்து 35 குடும்பங்களைச்சேர்ந்த 6 ஆயிரத்து 643 பேர் தற்போது தென்மராட்சி பிரதேசசெயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் இடம் பெயர்ந்தநிலையில் வாழ்ந்த ஆயிரத்து 247 குடும்பங்களைச்சேர்ந்த 3 ஆயிரத்து 896 பேரும்,

ஏனைய இடங்களில்இருந்த 754 குடும்பங்களைச்சேர்ந்த 2ஆயிரத்து 747பேரும்தென்மராட்சியில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இவ்வாறு மீளக்குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு இன்னமும் அடிப்படை உதவிகள் எதுவும் முழுமையாக வழங்கப்படாதநிலையில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலே வாழ்ந்து வருகின்றனர்.

(உ-77)

### அழிந்துவிட்ட ஆலயங்களை

# புனரமைக்கும் மாபெரும் பணி எங்கள் கைகளிலேயே உள்ளது

### இந்து கலாசார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இன்று உலகில் ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு அமைவாக நாமும் எம்மை மாற்றிக் கொள்ள வேண்டிய கட்டாயம் உள்ளது. இதற்கமைவாக இந்துகலாசார அமைச்சில் ஒரு புதிய அத்தியாயம் உருவாகிறது. இன்று இவ்வமைச்சு இணையத் தளத்தில் தன் காலடிகளைப் பதிக்கின்றது.

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சுக்கான இணையத்தளத்தை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்.

இவ்வமைச்சு எங்கள் புதிய அரசின் பிரதம அமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு புத்தம் புது அமைச்சாகும் இவ்வமைச்சு பிறந்து மாதங்கள் பத்தே முடிவடைந்துள்ளன. இன்னும் தவழும் பருவத்திலேயே இவ்வமைச்சு உள்ளது. ஆனாலும் இக்குறுகிய காலத்துள் இவ்வமைச்சில் கடமையாற்றும் அலுவலர்களின் அயரா முயற்சியினால் படிப்படியாக முன்னேறி வருகிறது.

இந்துமதம் இலங்கையில் மத்திரமல்ல ஆசியாக் கண்டம் உட்பட ஐரோப்பிய ஆபிரிக்க, அவுஸ்திரேலியக் கண்டங்களிலும் பரவி அங்குள்ள மக்களையும் தழுவியுள்ள ஓர் மதமாகும்.

இவ்வாறு பரந்து வாழும் மக்கள் இப்புதிய அமைச்சின் நடவடிக்கைகளையும் இந்து சமயம் பற்றிய விளக்கங்களையும் பெறுவதில் மிகுந்த ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றார்கள். இத்தகைய ஆர்வலர்களுக்குஎமது செய்திகளைக் கொடுப்பதற்கும் அவர்களது அபிப்பிராயங்களையும் சிந்தனைகளையும் பெற்றுக்கொள்வதற்கும் இவ் இணையத்தளம் வழிவகுக்கும்.

மேலும் இந்துசமயத்தை ஒரு பாடமாககற்கின்ற மாணவர்களுக்கும் மற்றும் ஆய்வாளர்களுக்கும் இவ்விணையத்தளத்தின் மூலம் வேண்டிய தகவல்களையும் வழங்கக்கூடியதாக இருக்கும் என்றார்.

(2-ம் பக்கம் பார்க்க)

# ஐந்தாண்டுத் திட்டத்தை அமுலாக்க

# 500 பில்லியன் அமெ.டொலர் தேவை

(கொழும்பு)

வட-கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியேற்றம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுவரும் ஐந்தாண்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு 500 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுவதாக புனர்வாழ்வு அகதிகள் மீள் குடியேற்று கை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு, கிளிநொச்சிமாவட்டங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள் குடியேற்றம் என்பவற்றுக்கான திட்ட வரைபுகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகம், தமிழீழகல்விமேம்பாட்டுப் பேரவை ஆகியன மேற்கொண்டு வருகின்றன.

கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்கள் ஊடாக இவ் வரைபுகள் விரைவில் சமர்ப்பிக்கப்படும். இங்கு மேற்கொள்ளப்படவேண்டிய அவசர திட்டங்கள் தொடர்பான தரவுகள் இதில் அடங்கும்.

இவ் வருடம் முடிவதற்கிடையில் கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் 8 ஆயிரம் பேர் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். இதற்கு 120 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது.

இதுவரை மீளக்குடியேறியவர்களுக்கென 20 மில்லியன் ரூபாவை புனர்வாழ்வு அமைச்சு வழங்கியுள்ளது. அத்துடன், வன்னியில் உள்ள பாடசாலைகளின் கூரைகளுக்கென 20 இலட்சம் ரூபாவையும் அமைச்சுவழங்கியுள்ளது. என்று குறிப்பிட்டார். (உ)

## அ. அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த பூபாலசிங்கம் பிரபானந்தர் என்பவருடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## சத்தியாக்கிரகம் கைவிடப்பட்டது

(கொழும்பு)

சுகாதார அமைச்சுக்கு முன்னால் நேற்று நடத்த திட்டமிட்டிருந்த சத்தியாக்கிரகப் போராட்டம் கைவிடப்பட்டதாக அரசாங்க பதிவு பெற்ற மற்று உதவி வைத்திய அதிகாரிகள் சங்கம்தெரிவித்துள்ளது.

சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவினர் சுகாதார அமைச்சர் பி.தயாரட்ணவுடன் நேற்று செய்து கொண்ட உடன்படிக்கையினை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-8)

## சிறுவருக்கு உதவும் திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின், சிறுவருக்கு, உதவும் திட்ட ஆரம்ப நிகழ்வு யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் எதிர் வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நிலையத்தின் தலைவர் சி வி கே. சிவஞானம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலர் பா. செந்தில் நந்தனனும், யாழ். வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா, வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா பசேந்திரன், யாழ். பல்கலைக் கழக நுண்கலைப் பீடத் தலைவர் பேராசிரியர் சபாஜெயராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

(உ)

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு

# வலம்புரி

## மாற்றம் அங்கும் இங்கும்

நடக்கும் என்பார் நடக்காது. நடக்காதென்பார் நடந்துவிடும் என்ற பாடல் அடிகள் இலங்கை இன விவகாரத்தில் சாலவும் பொருத்துடையது.

ஒரு காலத்தில் போர்க்களத்தில் சந்தித்த அரச படைகளும், புலிப்போராளிகளும் அருகருகே இருந்து பேசுகின்ற அளவில் நிலைமை மாறியுள்ளது போர்க்களத்தில் மோதுண்ட இருதரப்பினர் திருமலையில் இடம்பெற்ற கைதிகள் பரிமாற்றத்தின் போது பகைமை மறந்து அருகருகே இருந்து அளவளாவினர் எனின் இது போன்ற அன்னியோன்னிய உறவு யுத்தம் நடைபெற்று சமாதான சூழ் நிலைக்குள் வந்த நாடுகளில் இடம் பெற்றமை மிகக்குறைவே. இருதரப்பு அரசியல் தலைமைகள் சந்தித்திருப்பினும் போர்க்களத்தில் களமாடிய தளபதிகளின் சந்திப்பு இடம் பெற்ற வரலாற்றை அரசு–புலிப் படைகள் படைத்துள்ளன.

இது ஒருபுறம். மறுபுறத்தில் நடந்த சம்பவம் சாதாரண மக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கக் கூடியது. அதாவது விடுதலைப் புலி உறுப்பினர்கள் மட்டக்களப்பிலிருந்து வன்னிக்கு வருவதற்கு அரச படையினர் பாதுகாப்பு வழங்க, புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியூடாக மட்டக்களப்பிலிருந்து கொழும்பு சென்ற படையினருக்குப் புலிகள் பாதுகாப்பு வழங்கியுள்ளனர்.

ஆயுதம் ஏந்திக் களமாடியவர்கள் இப்போது ஒருவரை ஒருவர் பாதுகாப்பதில் தமது ஆயுதங்களைத் திசை திருப்பியுள்ளனரெனில் அது சமாதானத்தின் பயணம் வெற்றிப் பாதையில் செல்வதை உணர்த்தி நிற்கிறது.

அரச படைகளும் புலிப் படைகளும் ஒருவரை ஒருவர் பாதுகாப்பதில இப்போது ஈடுபட்டுள்ள போதிலும் அம்பாறை, திருமலை ஆகிய இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் இந்த உறவைப் பாதித்து விடுமோ என்று ஏங்கவைத்த நிலையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கொழும்பு கட்டுநாயக்கா விமான நிலையத்தினூடாக விமானப் படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் வன்னிக்கு வந்துள்ளமை சமாதானத்தின் மீதான நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது

# உள்ளத்திலெழும் பயம் ஊமையாக்கிவிடுகிறது

# ஊமையாக நடிப்பவரும் உலகத்தில் உண்டு

தனது பாட்டனாரின் தர்காவுக்கு (சமாதி) அந்த முஸ்லிம் இளைஞன்சென்றான் மண்டியிட்டுக் கண்களை மூடிக் கொண்டு பிரார்த்தனை செய்தான். அவன் கண்களைத் திறந்த போது. எல்லாம் இருட்டாக இருந்தது அதன் பிறகு அவனால் பேச முடியவில்லை ஊமையாகி விட்டான்.

நன்றாக வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களில் சிலர் திடீரென பேசும் சக்தி இழந்து ஊமைகளாக மாறிவிடும் பரிதாபமான சம்பவங்களை நாம் அடிக்கடி பார்த்தும், கேள்விப்பட்டும் வருகின்றோம். இப்படியான சிலரைக் குணப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கின்றது. ஒரு சிலரைக் குணப்படுத்த வேண்டிய அவசியமே இல்லாத நிலையும்' ஏற்பட்டிருக்கின்றது. இப்படியான மூன்று முஸ்லிம் இளைஞர்களின் ருசிகரமான கதைகளை உங்களுக்கு கூறப் போகிறேன்.

### ஜுனைடின் மகன் அன்ஸார்

1969 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாந் திகதி மக்கோனையைச் சேர்ந்த ஜனாப் எம். ஏ. எம். ஜுனைட் என்ற இரத்தினக்கல் வியாபாரி ஒருவர் அவரது மகனுடன் என்னைச் சந்திக்க வந்தார் கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த இவரது ஒரே மகன் திடீரென பேசும் சக்தியை இழந்து விட்டதால் அவரைக் குணமாக்குவது பற்றி ஆராய ஜனாப் ஜுனைட் என்னைச் சந்திக்கவந்திருந்தார். அவரது மகன் அன்ஸாரை மக்கோனையிலுள்ள தனது இரத்தினக் கல் வியாபாரத்தைக் கவனிக்க வேண்டுமென்கிற காரணத்தால் பள்ளியை விட்டு விலக்கி விட்டார்.

அன்ஸார் மக்கோனையிலும் ஜனாப் ஜுனைட் இரத்தின புரியிலுமாக இரத்தினக் கல் வர்த்தகங்களைக் கவனித்து வந்தனர். ஒரு நாள் அன்ஸார் காலையில் படுக்கையில் இருந்து எழுந்த போது ஊமையாகி விட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. செய்தி கேட்டவுடன் ஜுனைட் இரத்தின புரியிலிருந்து மக்கொனைக்கு விரைந்தார். எத்தனையோ, மாந்திரிகர்களும் கட்டாடிகளும் அன்ஸாரைப் பார்த்து மந்திரம் செய்தனர். நூல் கட்டினார்கள். எதுவுமே பலனளிக்கவில்லை. ஜுனைட் என்னைப் பற்றிக் கேள்விப்பட்டார். பலர் சிபார்சு செய்து என்னைச் சந்திக்கும்படி கூறினார்கள். அதன் பிறகு தான் இவர் தனது மகனுடன் என்னிடம் வந்தார். ஜுனைட் என்னிடம் கூறிய தகவல்கள் இவை தான், உடனே அன்ஸாரை மாடிக்கு அழைத்துச் சென்று ஹிப்னோடைஸ் செய்தேன். அன்ஸாரின் உள்ளுணர்வைத் தட்டி எழுப்பினேன். தனக்கு என்ன நடந்ததென்பதை அன்ஸார் அப்பொழுது விளக்கினார்.

### பாட்டனார் மரணம்

தனது தந்தையின் தகப்பனார் சம்பவம் நடந்ததற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் தான் இறந்தார். மகன் வழி ஒரே பேரனாகையால் அந்தப் பாட்டன் அன்ஸார் மீது உயிரையே வைத்திருந்தார். அதே போன்று அன்ஸார் பாட்டன் மீது அளவிலா அன்பும் பாசமும் கொண்டிருந்தார். பாட்டன் இறந்து விட்டாலும் கூட எந் நேரமும் அவர் சிந்தனையாகவே இருந்தது. ஒரு நாள் இரவு நித்திரையிலிருந்து தன்னறிவின்றி எழுந்த அன்ஸார் வீட்டை விட்டு வெளியே வந்தார். இருநூறு யார் தூரத்திலிருந்த தனது பாட்டனின் தர்காவுக்கு (சமாதி) சென்றார். அங்கு சென்று மண்டியிட்டுப் பிரார்த்தனை செய்ய முற்பட்டார். கண் விழித்த போது ஒரே இருளாக இருந்தது. அவ்வளவு தான், அதன் பிறகு தனக்குப் பேச முடியவில்லை என்றார். இது தான் அன்ஸாரின் உள்ளுணர்வு தெரிவித்த விபரங்கள்.

இவற்றைக் கேட்ட பின்னர் அன்ஸாருக்கு வழங்க வேண்டிய மனோதத்துவ ரீதியான அறிவுகளை வழங்கி விட்டு அதன் பிறகு அவரைக் கண் விழிக்கச் செய்தேன். அவரும் எழுந்தார். ''கீழே சென்று உன் தந்தையை மேலே வரச் சொல்'' என்றேன். அன்ஸார் விர்ரென்று படிகளில் இறங்கிக் கீழே போனார். அவரது தந்தையும்மற்றும் உறவினரும் கீழே வரும் அன்ஸாரைவெறிக்கப் பார்த்தபடி இருந்தனர். அருகில் வந்த அவர், தனது தந்தையிடம் நெருங்கினார். 'உங்களை மேலே வரச் சொல்லுகிறார்' என்று கூறினார். நான் மேலிருந்துஇதையெல்லாம் அவதானித்துக் கொண்டிருந்தேன். மகன்பேசியது அந்தத் தந்தையின் முகத்தில் ஆயிரமாயிரம் மாறுதல்களைக் காட்டியது.

### தந்தையின் மகிழ்ச்சி

அவர் ஒருவிதபரபரப்புடன் மேலே வந்தார். என்கைகளைப் பற்றிக் கொண்டுபேசவ் முடியாது திணறினார். அவ்வளவு மகிழ்ச்சி அவருக்கு ஜுனைட்டை அமைதிப்படுத்திய நான் என்ன நடந்ததென விளக்கினேன்.' பாட்டன்மீது அளவில்லா அன்புவைத்திருந்த காரணத்தால் அன்றிரவு தன்னை அறியாது கல்லறைக்குச் சென்ற அன்ஸார்பிரார்த்தனை செய்தார். கண்விழித்த போது தான் மயானத்திலிருப்பதை உணர்ந்தார். சாதாரண மனிதனைப் போன்ற பயம் ஏற்பட்டது. அந்தத்திடீர் அதிர்ச்சி அவர் மூளையைத் தாக்கி ஊமையாக்கிவிட்டது. இனிமேல் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை; போய் வாருங்கள்' என்று அவர்களை அனுப்பி வைத்தேன். மார்ச் பத்தாந்திகதி ஜுனைட் எனக்கு நன்றிகூறிக் கடிதம் ஒன்றும் எழுதினார். தன்மகன் வழமை போல் நன்றாகஇருப்பதாக அதில் குறிப்பிட்டிருந்தார்.

### ஏ.ஆர்.எம். ரமலி

இதேபோன்று 15-6-1974 அன்று திடீரென ஊமையாகிவிட்ட பாணந்துறையைச் சேர்ந்த ஏ.ஆர்.எம். ரமலி என்ற முஸ்லிம் இளைஞனையும் நான் குணப்படுத்தினேன் இவர் குணமாக்கப்பட்ட பின்னர் இவரது சகோதரர் எழுதிய கடிதமொன்றை இங்கு தருகிறேன். அதிலிருந்து விபரங்களை நீங்கள் அறியலாம்.

15-6-1974 அன்று ஏ.ஆர். எம். ரமலி என்ற சகோதரனுடன் நான் உங்கள்இருப்பிடம் வந்தேன். பேசமுடியாதுவந்த அந்தப் பையனை நீங்கள் உடனடியாகப் பேச வைத்தீர்கள் உங்கள் சேவைக்கு எனது பாராட்டுக்கள். நாம் அவரை உங்களிடம் அழைத்து வரு முன்னர் இரண்டுமாந்திரீகரை நாடினோம். எந்தப்பிரயோசனமும் அற்றுப் போயிற்று. இப்பையனுக்குப் பேச முடியாமல் போனதற்கு நான்கு தினங்களுக்கு முன்னர் தான் மைத்துனர் ஒருவர் இறந்தார். அவரும் இறக்கும் போது இப்படிப் பேசமுடியாது இருந்தார். அவருடைய ஆவிதான் இவரைப் பிடித்து ஊமையாக்கி விட்டதென்று கூறிய மாந்திரீகர்கள் மந்திர நூல் கையில் கட்டி கழுத்தில் தாயத்துப் போட வேண்டும் என்றனர். அப்படிச் செய்யும் போது அவ்வீட்டில் இளம் ஆண்களோ, பெண்களோ இருக்கக் கூடாதெனவும் கூறினார்கள்.

அப்படி எவராவது இருந்தால் இந்த ஆவி அவர்களைப் பிடித்துக் கொள்ளுமென்றும் கூறினர். இதன்பிறகு ஒரு முஸ்லிம் பெரியார் மந்திர மோதிய தண்ணீரைத் தெளித்தார். இப்படிப் பல ஜாலவித்தைகள் செய்யப் பட்டன. ஆனால், எதுவுமே பலனளிக்கவில்லை. இதன் பிறகு தான் க. பொ. த. பரீட்சை எழுதவேண்டிய எனது சகோதரனை எப்படியாவது குணப்படுத்த உங்களிடம் அழைத்து வந்தோம். ஐந்தே நிமிடங்களில் நீங்கள் பேச வைத்து எங்களைப் பூரிப்பும், திகைப்பும் அடையச் செய்தீர்கள். இவ்வாறு களுத்துறையிலிருந்து ஏ. ஆர். எம். ஹரிஸ் எழுதியிருக்கிறார். இவரது தம்பியும், நெருங்கிப் பழகிய உறவினர் திடீரென இறந்த அதிர்ச்சியால்தான் ஊமையாகி விட்டிருந்தார்.

### நடிப்பு ஊமை

இன்னொரு முஸ்லிம் இளைஞரை என்னிடம் அழைத்து வந்தனர். ஹிப்பி போன்று காட்சியளித்தஇவர் கொழும்பு ஆட்டுப்பட்டித் தெருவைச் சேர்ந்தவர். இவரை அழைத்து வந்ததுமே இவர் வேண்டுமென்று ஊமை போல் நடிக்கிறார் என்பதை உணர்ந்து கொண்டேன். இவரை எவராலும் குணமாக்க முடியாது. அவராகத்தான் பேச வேண்டுமென்பதையும் கூட்டிவந்தோரிடம் சொல்லி அனுப்பினேன். எவருடைய புத்திமதியையும் கேட்காது வீணே திரிந்த இவரை, இவரது தந்தை கண்டித்திருக்கிறார். இதனால் வீட்டைவிட்டு ஓடிய இவர் சில மாதங்களின் பின்னர் வீட்டாரின் அனுதாபத்தைப் பெற ஊமை போல் நடிக்க ஆரம்பித்துள்ளார் என்பதும் எனக்குப் புரிந்தது. இப்படி ஊமைகள் பலவிதம், □

### டாக்டர் ஏபிரஹாம் கோவூர்

## தினசரி தியானம்

## சொன்ன சொல்

சொன்ன சொல்லை எப்போதும் காப்பாற்றவேண்டும். இதுதான் இவ்வுலக வாழ்க்கை, ஆன்மீக வாழ்க்கையின் வெற்றிக்கு வழி, வாழ்க்கையில் தடைகள் ஏற்படக் காரணம் நீங்கள் சொன்ன சொல்லைக் காப்பாற்றாததே ஆகும். இதில் தவறுவது உங்கள் வாழ்க்கைப்பாதையில் ஏராளமான இடர்ப்பாடுகளை ஏற்படுத்தும். நண்பர்கள் பகையாவார்கள். ஆன்மீகவாழ்க்கையில் பலமுடிவுகளை எடுக்கிறீர்கள். ஆனால் ஒன்றிலும் நிலைப்பதில்லை. முக்கிய ஒழுக்கமான சொன்ன சொல் தவறாமையை வளர்க்காவிட்டால், வாழ்க்கையில் முன்னேற்றமோ வெற்றியோ கிடைக்காது.

சுவாமி சிவானந்தர்

# இன்று முதல் மீண்டும் படைக்கு ஆட் சேர்ப்பு

இராணுவத்துக்கு மீண்டும் ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கு இராணுவத்தலைமையகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதற்கமைய இன்று புதன் கிழமை முதல் ஒருமாதகாலத்துக்கு இராணுவத்துக்கு ஆட்களை சேர்கும் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது என பாதுகாப்புஅமைச்சு தெரிவித்துள்ளது

நாட்டிலுள்ள சகல படை முகாம்களிலும் இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கை இடம் பெறவுள்ளது. (உ-8)

## பொதுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தரம் ஒன்பதிற்கான மாகாணமட்ட பொதுப் பரீட்சை அடுத்த மாதம் 11ஆம் திகதி தொடக்கம்15 ஆம்திகதிவரை நடைபெறவுள்ளதாக கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது(உ-19)

# சர்வதேசப் பயங்கரவாதத்தை விடுதலைப்புலிகள் எதிர்க்கின்றனர்

## ஐரோப்பியக் குழுவினரிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



அரசியல்துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை ஸைரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி கள் நேற்று மாலை 3.30மணி முதல் 4.30மணி வரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியி ருந்தனர்.

(கிளிநொச்சி)

**தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக் - காகவே நாங்கள் ஆயுதம் ஏந்திப் போரா டுகின்றோம். சர்வதேசம் தழுவிய பயங்கர வாதத்தை நாமும் வன்மையாக எதிர்க் கிறோம்.**

**இவ்வாறு தமிழீழவிடுதல்லைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் தன்னைச்சந்தித்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.**

இப்பேச்சுவார்த்தையின்போது அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

தமிழீழ யுத்தத்தினால் 70ஆயிரம் பொதுமக்கள் வரை கொல லப்பட்டுள்ளனர். சிறுவர்களை நாம் ஒருபோதும் யுத்தத்தில் ஈடுபடுத்துவதில்லை தாய் தந்தையரை இழந்த சிறுவர்க ளை நாம் பராமரித்து வருகி றோம் அவர்களை தெருத்தெரு வாக அலையவிட நாம் ஒருபோ தும் தயாராக இல்லை. அவர் களை நாம் பராமரிக்காது போ னால் அவர்களது எதிர்காலம் பாழாகிப்போகும். இதனாலேயே நாம் அவர்களைப் பராமரித்து வருகின்றோம். கரும்புலிகளைப் பொறுத்தவரை அவர்களை நாம் தற்கொலையாளிகள் என்று கருதவில்லை அவர்களை நாம் தற்கொடையாளிகள் என்றே கருதுகின்றோம். என்றும் தமிழ்ச் செல்வன் தெரிவித்துள்ளார். (ம)

## சமாதான முயற்சியை எதிர்த்து ஜே.வி.பி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ''ஈழமா சமாதானமா'' என்னும் தலைப்பில் நேற்று கொழும்பில் ஜே.வி.பி ஆர்ப் பாட்டம் நடத்தியது.

கொழும்பு லிப்டன் சுற்று வட்டாரத்தில் பிற்பகல் ஆர்ப்பாடடத்தில் ஈடுபட்ட ஜே.வி.பியினர், அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று, ஹைப்பார் மைதானத்தில் பொதுக் கூட்டமொன்றையும் நடத்தினர்.

இக்கூட்டத்தில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச,மற்றும் செயலாளர் ரில் வின் சில்வா ஆகியோர் உரை யாற்றினர். (இ)

## அரச வெற்றிடங்களை நிரப்ப வேண்டாம் திறைசேரி அறிவிப்பு

(கொழும்பு)

அரச திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்கள் எதனையும் தற்போது நிரப்ப வேண்டாம் என்று திறைசேரி சகல அமைப்புக்களுக்கும் சுற்று நிருபம் ஒன்றை அனுப்பிவைத் துள்ளது.

திறைசேரியின் செயலாளர் சரித்தரத்வத்தை அனுப்பிவைத் துள்ள சுற்று நிருபத்தில் திறை சேரியில் போதிய பணமின் மையால் அரச திணைக்களங் களில் புதிய நியமனம் எவற்றை யும் மேற்கொள்ளவோ, வெற்றி டங்களை நிரப்பும் நடவடிக் கையில் ஈடுபடவோ வேண்டா மென்று அதில் கேட்கப்பட்டுள் ளது. (வ)

## எரிபொருட்களின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருட் களின விலைகளை நேற்று நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளது.

அந்த விலை அதிகரிப்பின்படி கொழும்பில் ஒருலீற்றர் பெற் றோல் 49ரூபாவாகவும், ஒரு லீற றர் டீசலின் விலை 30ரூபாவா கவும் ஒரு லீற்றர் மண்ணெண் ணையின் விலை 24 ரூபாவாக வும் விற்பனை செய்யப்படவுள் ளது.

ஐக்கியதேசிய முன்னணி அரசு பதவி ஏற்று ஒருவருடம் முற்றுப்பெற்ற நிலையில் மூன் றாவது தடவையாக எரிபொருட்க ளின் விலை அதிகரிக்கப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## தலைவர் பிரபாவைச்சந்திக்க நடவடிக்கை எடுக்குக!

### அமைச்சர் ஹக்கீம் கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்த ஒழுங்கு செய்து தருமாறு முஸ்லீம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான றவூப்ஹக் கிம் நோர்வே தூதரக அதிகாரிக ளிடம் நேற்று கோரிக்கை விடுத் துள்ளார்.

கடந்தமாதம் தாய்லாந்தில் இடம் பெற்ற பேச்சுவார்த்தை களின் போது விடுதலைப்புலிக ளின் தலைவர் பிரபாகரனுடனா ன சந்திப்புக்கு ஒழுங்கு செய்வ தாக அமைச்சர் ஹக்கிமிடம் தெரிவிக்கப்பட் டிருந்தது. இத னையடுத்தே அவர் பிரபாகர னைச் சந்திப்பதற்கான ஒழுங்கு கள்ளைச் செய்து தருமாறு நோர் வே அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதே வேளை அமைச்சர் ஹக்கீம் ஐரோப்பிய யூனியனின் பிரதி நிதிகளை நேற்று சந் தித்துப் பேசியுள்ளார்.

இச்சந்திப்பின் போது வடக்கு கிழக்குட்பட முஸ்லீம்களுக்குரிய அதிகாரம் வழங்கப்பட வேண் டும், முஸ்லீம்கள் தமது சொந்த இடங்களில் உரிமையுடன் வாழ வழிசெய்ய வேண்டுமென்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிக ளிடம் அமைச்சர் ஹக்கீம் கேட் டுக் கொண்டார்

(ம)


### வெரித்தாஸ் வானொலி குழுவினருடன ஒரு சந்திப்பு

### உறவுகளின் சங்கமம்

காலம்:- நாளை வியாழக்கிழமை (17.10.2002)

நேரம் :- காலை 9மணி

இடம் :- யாழ். மறைக்கல்வி நடுநிலையம்

வெரித்தாஸ் வானொலி நேயர்கள், அன்பர்கள் அனைவ ரையும் அன்புடன் அழைக்கின்றோம் உங்கள் கருத்துக்கள், விமர்சனங்கள், கேள்விகள் அனைத்தையும் நேரடியாகவே கேட்டு அறிந்து கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம். தவற விடாதீர்கள்!

[5137] யாழ். மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு.

### மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம்

யாழ். பல்கலைக்கழகத்தால் நடாத்தப்பட்ட 22வது பட்டமளிப்பு விழாவில் கலாநிதிப் பட்டம் பெற்ற

**பண்டிதர் செல்லையா திருநாவுக்கரசு**

அவர்களையும் பொது நிர்வாகமாணிப் பட்டம் பெற்ற

**செல்வி சாந்தநாயகி பொன்னம்பலம்**

அவர்களையும் மேலும் சிறப்புற்று ஓங்கிவாழ நல்லைக்கந்தன் அருளை வேண்டுபவர்கள்;

82, செட்டித்தெரு, நல்லூர். [C/5136] வேலணை பாலா (குடும்பத்தினர்)


### ஆலோசகர்....

வந்திறங்கிய விடுதலைப் புலிக ளின் அரசியல் ஆலோசகர் அன் ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம் தம்பதியினரை தமி ழீழ விடுதலைப் புலிகளின் அரசி யல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், விடுத லைப் புலிகளின் கலைப் பண் பாட்டுக்கழக பொறுப்பாளர் கவி ஞர் புதுவை இரத்தினதுரை, கடற்புலிகளின் சிறப்புத் தள பதி கேணல் சூசை, தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் ப.நடே சன், தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா உட்பட தமி ழீழ விடுதலைப் புலிகளின் தளப திகள், பொறுப்பாளர்கள், போராளி கள் உட்பட பலர் வரவேற்று குளிர் பானம், சிற்றுண் டிகள் வழங் கி உபசரித்தனர்.

இதனையடுத்து அரசியல்து றைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன், கடற்புலிகளின் சிறப் புத் தளபதி கேணல் சூசை ஆகி யோர் அரசி யல் ஆலோசகர் அன ரன் பாலசிங்கம் தம்பதியினரை பலத்த பாதுகாப்புடன் தேசியத் தலைவர் வேலுபபிள்ளை பிரபா கரனிடம் அழைத்துச் சென்றனர்.

அரசுக்கும் விடுதலைப் புலிக ளுக்குமிடையில் ஏற்பட்ட யுத்த நிறுத்த உடன் படிக்கையின் பின் தாய்லாந்தில் முதற்கட்ட சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

**அம்பாறை,திருமலைப் படுகொலைகளுக்குப் பின் முதலாவது சந்திப்பு**

தாய்லாந்துப் பேச்சுவார்த்தை யின்பின் சிறிலங்கா அரசபடை யினரால் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த மீறல்களினால் 10 அப்பாவிப் பொது மக்கள் கொல் லப்பட்டும் 50க்கும் அதிகமா னோர் காயம் பட்ட சம்பவங் களுக்குப் பின் தேசியத தலைவர் பிரபாகரனுடன் அன்ரன் பாலசிங் கம் முதல் முறையாக சந்தித் திருப்பது வரலாற்று முக்கியத்து வம் வாய்ந்தது என அரசியல் ஆய்வாளர்களினால் கருத்து வெளியிடப்பட்டுள்ளது. (ம)

### மேஜர்....

அல்லது கிரிஜா (இராசையா சசீதா ஐயனார் கோவிலடி சுன்னாகம்) அவர்களுக்கு தமிழீழ விடுத லைப் புலிகளின் யாழ்மாவட்ட அரசியல் துறையினர் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள் ளனர்.

இன்று கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் பிற்பகல் 4 மணிக்கு இறுதி அஞ்சலியும் வீரவணக்க நிகழ்வும் இடம் பெற வுள்ளது.

(இ-5)

### விமானப்....

வழியனுப்பி வைத்தனர். ஆலோச கர் அன்ரன் பாலசிங்கம் மற்றும்அவரது மனைவி அடேல் ஆகியோருடன் கட்டுநாயக்காவில் இருந்து வன்னி வரை ஹெலிகொப்படரில் அவர் களுக்குப் பாதுகாப்பாக விமானப் படையின் கட்டளை அதிகாரி ராஜவிக்கிரமசிங்கவும் கூடவே சென்றார் என்றும் தெரிவிக்கப்பட்டு கிறது. (இ)

### கட்டுநாயக்க....

படைக்குச் சொந்தமான ஹெலி யில் வன்னிக்கு புறப்பட்டுச் சென் றனர்.பாலசிங்கத்தின் வரவை எதிர் பார்த்துக் காத்திருந்த பத் திரிகை யாளர்கள், அவர் பயணம் செய்த விமானம் தரையிறங்கிய காட்சி யையும், ஹெலிபறந்து சென்ற காட்சியையும் மட்டுமே படம் பிடித்துக் கொண்டனர். (இ)

### மேலும்....

உயிரிழந்துள்ளார். இவருடன் சேர்த்து சம்பவத் தில் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கை எட் டாக உயர்ந்துள்ளது. கல்முனை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த இவர் சிகிச்சை பலனளிக் காத நிலையில் நேற்று உயிரிழந துளளார். (இ)

### கண்காணிப்பு.......

மாவட்ட யுத்தநிறுத்தக் கண் காணிப் புக்குழுவின் விடுதலைப் புலிகளின் பிரதிநிதியான சௌந்த ரராஜன் கருத்து தெரிவிக்கை யில்:-

கண்காணிப்புக் குழுவின் தலை மையலுவலகத்திற்கு அனுப்பப் பட்ட காஞ்சிரங்குடாத் தாக்குதல் சம்பவம் குறித்த அறிக்கையில் பொதுமக்கள் காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாமுக்குள் சென்று கட்டு மீறிய நடவடிக் கையில் ஈடு பட்டதாலேயே படையினர் துப் பாக்கி பிரயோகம் செய்ய வேண் டிய நிலைமை ஏற்பட்டுள்ளது என்றும் இவ்வாறு அமைந்த அவ்வறிக்கையை நாம் கடுமை யாக எதிர்த்துள்ளோம் ஏனெனில்எமது முடிவு அது வல்ல. அது ஒரு பக்கம் சார்பாக எடுக்கப்பட்ட முடிவு என்பதே எனது கருத்து என்று சௌந்தரராஜன் கூறினார். (இ)

### நோர்வே....

அமைச்சர் விடார் ஹெல்கி சைன் தலமையிலான நோர்வே யின் உயர்மட்டக்குழு தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் ஆகியோ ரைச்சந்தித்து பேசவுள்ளனர்.

இச்சந்திப்பில் தாய்லாந்தில் இடம் பெற்ற முதற்கட்டப் பேச் சுவார்த்தைகளின்போது எடுக் கபட்ட தீாமானங்களுக்கு அமைய தமிழீழ விடுதலைப் புலிகளும் சிறிலங்கா அரசும் இணைந்த கூட்டுச்செயலணி யின் கட்டமைப்பை உருவாக்கு வது தொடர்பாகவும் அரச படை களின் உயர்பாதுகாப்பு வலயங் கள் தொடர்பான பிரச்சனைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட வுள்ளதுது எனத் தெரிவித்துள் ளார். (ம)

### ஐரோப்பிய....

விடுதலைப்புலிகளுக்குமிடையே ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன் படிக்கையினூடாக சமதான சூழ லைப் பலப்படுத்தி வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அபிவி ருத்திப்பணிகளை மேற்கொள் வது தொடர்பான பேச்சுவார்த் தைகளை மேற்கொண்டிருந் தனர்.

ஐரோப்பிய பாராளுமன்றக் குழுவில் அங்கம் வகிக்கும் பிரித்தானியப் பாராளுமன்ற உறுப் பினரான ஹரிதோமஸ் மற்றும் ஐரோப்பிளப் பாராளு மன்ற உறுப்பினரும், ஐரோப்பி யப் பாராளுமன்றத்தின் மனி தஉரிமைக்குழுவின் தெற்காசி யப் பிரதிநிதிகள் குழுவின் உறுப பினருமான றொபேட் ஈவன்ஸ் ஆகியோரும் கலந்த கொண்டு நிரந்தர சமாதான சூழலினூடாக வடக்கிழக்குப் பகுதிகளில் அபிவி ருத்திப் பணிகளை மேற்கொள் வதற்குரிய நிலைமைகளையும் ஆராய்ந்துள்ளனர்.

(ம)

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.